# பாட்டாளி சிந்தனை

Volume 27 No. 5

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

SUCI (Communist)

January 2017

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 5




ஏப்ரல் 22, 1870 – ஜனவரி 21, 1924

## தோழர் லெனின் நீடூழி வாழ்க!

*“ஷீயேட்மன்கள் மற்றும் காவுட்சிகள் மக்களை ஏமாற்றுவதற்காகவும், இன்றைய ஜனநாயகத்தின் பூர்ஷ்வா குணாம்சத்தினை அவர்களிடமிருந்து மறைப்பதற்காகவும், “தூய்மையான ஜனநாயகம்” மற்றும் “ஜனநாயகம்” பற்றிப் பொதுப்படையாகப் பேசுகின்றனர். பூர்ஷ்வாக்கள் தங்கள் கைகளில் அரசு அதிகாரத்தின் ஒட்டுமொத்த சாதனங்களையும் தொடர்ந்து வைத்துக்கொள்ளட்டும், விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில சுரண்டலாளர்கள் முன்பிருந்த, பூர்ஷ்வா, அரசு எந்திரத்தை தொடர்ந்து பயன்படுத்திக்கொண்டிருக்கட்டும்! இத்தகைய சூழலில், நடைபெறும் தேர்தல்களை பூர்ஷ்வாக்கள் தெளிவான காரணங்களுக்காக, “சுதந்திரமான” , “சமத்துவமான” மற்றும் “ஜனநாயகமான” “அனைவருக்குமான” தேர்தல் என புகழ்ந்து தள்ளுகின்றனர். இத்தகைய வார்த்தைகள் யாவும், உண்மையை மறைப்பதற்காக, உற்பத்தி சாதனங்களும் அரசியல் அதிகாரமும் சுரண்டலாளர்கள் கைகளில் இருந்துகொண்டிருக்கின்றது என்ற உண்மையை மறைப்பதற்காக திட்டமிட்டு கூறப்படுவதாகும். ஆதலால், சுரண்டப்படுபவர்களின் அதாவது பெருவாரியான மக்களின் உண்மையான விடுதலை மற்றும் உண்மையான சமத்துவம் என்ற கேள்விக்கே இடமில்லை. நவீன ஜனநாயகத்தின் பூர்ஷ்வா குணாம்சத்தை மக்களிடம் மறைப்பது, அதனை பொதுவான ஜனநாயகம் அல்லது “தூய்மையான ஜனநாயகம்” என உருவகப்படுத்துவது பூர்ஷ்வாக்களுகு லாபகரமானதும் இன்றியமையாததுமாகும். ஷீயேட்மன்கள் மற்றும் காவுட்சிகள் இதனை மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டு, ஆனால், பாட்டாளி வர்க்கத்தைப் பொருத்தவரை நடைமுறையில் அதனைக் கைவிட்டு விட்டு, பூர்ஷ்வாக்களின் பக்கம் சென்றுவிடுகின்றனர். . .*

*முதலாளிகளும் லாபமீட்டுபவர்களும் தங்களால் அபகரிக்கப்பட்ட “உடைமைகளை”யும் “தயாராக இருந்த” அரசு அதிகாரத்தின் சாதனங்களையும் தங்கள்வசம் வைத்துக் கொண்டிருக்கையில். . . . முதலாளித்துவ கூலி–அடிமை முறையின் விளைவாக மட்டுமின்றி, நான்காண்டுகளாக நடைபெற்ற வேட்டையாடிடும் போரின் விளைவாக உழைப்பாளர்களும் அனைத்து உழைக்கும் மக்களும் அரை வயிற்றுடன், அரைகுறை ஆடையுடன் சீரழிந்து மற்றும் சோர்ந்து போயிருக்கையில், தூய்மையான ஜனநாயகம் என்று பேசுவது, பொதுப்படையாக ஜனநாயகம் என்று பேசுவது, சமத்துவம் என்று பேசுவது, சுதந்திரம் மற்றும் அனைவருக்குமான உரிமைகள் என்று பேசுவது உழைப்பாளர்களையும் சுரண்டப்பட்ட மக்களையும் இகழ்வதாகும்.*

*(பூர்ஷ்வா) ஜனநாயகக் குடியரசு என்பது நடைமுறையில் பூர்ஷ்வாக்களின் சர்வாதிகாரமாகவும், உழைக்கும் மக்களின் மீதான சுரண்டலாளர்களின் சர்வாதிகாரமாகவும் இருப்பதை, பூர்ஷ்வாக்கள் “மக்களுக்கான அரசாங்கம்” அல்லது பொதுவான ஜனநாயகம் அல்லது தூய ஜனநாயகம் என பாசாங்குத்தனமாகப் பேசி விவரித்திடுமாறு கட்டாயப்படுத்தப்பட்டிருக்கின்றனர். ஆனால், மார்க்சிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள் இந்த வேடதாரித்தனத்தை அம்பலப்படுத்தி ஜனநாயகக்குடியரசு, சட்டசபை மன்றம், பொதுத்தேர்தல் போன்றவைகள் நடைமுறையில் பூர்ஷ்வாக்களின் சர்வாதிகாரம் என்பதையும் முதலாளித்துவத்தின் நுகத்தடியிலிருந்து உழைப்பாளர்களை விடுவிக்க வேண்டுமாயின் இச்சர்வாதிகாரத்தை அகற்றி அவ்விடத்தில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை கொண்டுவருவதைத்தவிர வேறு மாற்றுவழி ஏதுமில்லை என்பதையும். . . . பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் மட்டுமே மூலதனத்தின் ஒடுக்குமுறையிலிருந்து, அதன் பொய்களிலிருந்து, பொய்மையிலிருந்து மற்றும் பூர்ஷ்வா ஜனநாயகத்தின் வேடதாரித்தனத்திலிருந்து – பணம் படைத்தோரின் ஜனநாயகத்திலிருந்து மானுடத்தை விடுவித்து, ஏழைகளுக்கான ஜனநாயகத்தை நிறுவி, அதாவது உண்மையில் உழைப்பாளர்களுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் ஜனநாயகத்தின் பயன்கள் சென்றடையுமாறு ஆக்கிடவும் முடியும் என்ற இந்த வெளிப்படையான மற்றும் எளிமையான உண்மையினை உழைப்பாளர்களிடம் மற்றும் பொதுவாக உழைக்கும் மக்களிடம் சொல்கின்றனர், ஆனால் இப்போது, (மிகப்பெரும் ஜனநாயக–பூர்ஷ்வா– குடியரசிலும்கூட) ஜனநாயகத்தின் பயன்கள் யாவும் உண்மையில், பரந்துபட்ட உழைக்கும் மக்களுக்குச் சென்றடைவதில்லை”*

***(ஜனநாயகமும் சர்வாதிகாரமும், தொகுப்பு நூல், தொகுதி 28, பக்கம் 368–371)***

# மத்திய அரசாங்கம் தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்து, விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கு

*வறட்சி, புயல், வெள்ளம் என எந்த ஒரு இயற்கைச் சீற்றத்தாலும் பாதிக்கப்படும் தொழிலாக விவசாயம் தொடர்ந்து இருக்கின்றது. இச்சூழ்நிலையில் தென்மேற்கு பருவமழையும், வடகிழக்கு பருவமழையும் பொய்த்துவிட்டதால் தமிழ்நாட்டில் விவசாய உற்பத்தி கடுமையான பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. நீர்ப்பிடிப்பு பகுதி களும் நீர்நிலைகளும் வறண்டன. காவிரி பாசனப் பகுதிகளும், டெல்டா, மாவட்டங்களும் முல்லைப் பெரியாறு பாசனப்பகுதிகளும் மிகக் கடுமையான வறட்சிக்கு ஆளாகி விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.*

*விவசாயத்தை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள இம்மாவட்ட விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் மழை பொழியும் என்றும் பாசனத்திற்கு நீர் கிடைக்கும் என்றும் எதிர்ப்பார்த்து சாகுபடி செய்யத் துவங்கினர். அடகு வைத்து கந்து வட்டிக்கு கடன் வாங்கியும் வங்கிகளில் பயிர்க்கடன் உள்ளிட்ட கடன் வாங்கியும் விதை உரம் பூச்சி மருந்துகள் போன்ற செலவுகளைச் செய்து விவசாயம் செய்தனர். ஆனால், **60%** மழை பொய்த்து வறட்சி நீடித்த தாலும், நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததாலும் பாசனத்திற்கு நீர் இன்றி பயிர்கள் கருகத் துவங்கின. ஆனால், இயற்கை தந்த துன்பத்தை மனித அறிவைக் கொண்டு வெற்றிகரமாக எதிர்கொண்டிருக்க இயலும். ஆனால், ஆட்சியாளர்கள் தொடர்ந்து கடை பிடித்துவரும் விவசாய விரோத, விவசாயிகள் விரோத, மக்கள் விரோத, விவசாயக் கொள்கை களாலும் கட்டற்ற வியாபாரமயத்தை ஊக்குவிக்கும் தனியார்மயக்கொள்கைகளால் நீர் ஆதாரங்கள்கூட தனியாரின் லாப வேட்டைக்கு திறந்துவிடப்பட்ட தாலும் மக்கள் சார்பான சரியான நீர்க்கொள்கை இல்லாததாலும் இயற்கை பொய்த்ததால் ஏற்பட்டுள்ள துன்பம் மிகக்கொடூரமாக நம்மை பாதித்துள்ளது.*

*விஞ்ஞானபூர்வமான நீர் மேலாண்மை செய்யத் தவறி, ஆறுகள், ஏரிகள், குளங்கள், கண்மாய்கள் உள்ளிட்ட நீர்நிலைகளை உரிய காலமுறை இடை வெளியில் தூர்வாராமலும், மேம்படுத்தாமலும், புதிய நீர் நிலைகளை உருவாக்கத் தவறியதாலும், விவசாய உற்பத்தி என்பது எப்போதுமே நிச்சயமற்ற நிலைமையையே கொண்டிருக்கிறது. தற்போது மழையும் பொய்த்துப்போனது நிலைமையை மேலும் மோசமானதாக்கி பயிர்கள் முற்றிலும் காய்ந்து கருகக் காரணமாயின. இதன் விளைவு, விவசாயத்தையே நம்பியிருக்கும் ஊரக மக்கள் பஞ்சத்தில் தள்ளப்பட்டனர். பசும்புல், வைக்கோல், தீவனத்தையும் குடிநீரையும் நம்பியிருக்கும் கால்நடை வளர்ப்பும் கடும் பாதிப்பு அடைந்தது. இதுவரையில் **169** விவசாயிகள் விவசாயத்தில் ஏற்பட்ட நஷ்டத்தால் இறந்து உள்ளதாக செய்திகள் வந்துள்ளன. இலட்சக் கணக்கான விவசாயிகள் நிவாரணம் கேட்டு தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.*

தொடர்ச்சி 2ம் பக்கம்

# மத்திய அரசாங்கம் தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்து, விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கு

1ம் பக்கத் தொடர்ச்சி

மத்திய பாஜக அரசாங்கத்தின் 500, 1000 பணமதிப்பு நீக்க அறிவிப்பும் சேர்ந்து விவசாயிகளின் வாழ்க்கையை மேலும் இருண்ட சூழ்நிலைக்கு தள்ளியுள்ளது. கூட்டுறவு வங்கிகள் செயல்பாடததால் விளைபொருட்களை சந்தையில் விற்க முடியாததால் விவசாயமும் விவசாயம் சார்ந்த தொழில்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுயுள்ளன. இது போன்றே சிறு தொழில்களும் முடங்கியுள்ளன. சமீபத்தில் வீசிய வார்தா புயலால் காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் நெல், வாழை பயிர்களும் கடும் சேதம் அடைந்துள்ளன.

இவ்வனைத்து காரணங்களுக்காவும் தமிழ்நாட்டை வறட்சி பாதித்த மாநிலமாக அறிவித்து, மத்திய, மாநில அரசாங்கங்கள் அதற்குரிய நிவாரணங்களை உடனடியாக வழங்க வேண்டும்.

**கீழ்கண்ட கோரிக்கைகளை மத்திய, மாநில அராசங்கங்கள் நிறைவேற்றிட வலியுறுத்துகிறோம்**

- மரணமடைந்த விவசாயிகளின் குடும்பத்துக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். அந்தக் குடும்பத்தில் உள்ள ஒருத்தருக்கு அரசு வேலை வழங்க வேண்டும்.
- விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ30,000 நிவாரணம் வழங்க வேண்டும்.
- விவசாயத் தொழிலாளர்களுக்கு ரூ20,000 நிவாரணம் வழங்க வேண்டும்.
- நிலவரி, பயிர்க்கடன், கூட்டுறவு கடன், விதை, உரம், பூச்சி மருந்து கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும்.
- கால்நடைகளை பராமரிப்பதற்கு தீவனம் வழங்கவேண்டும்.
- கிராமப்புற மக்களுக்கு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நாளொன்றுக்கு ரூ300 வீதம் குறைந்தபட்சம் 200 நாட்கள் வேலை உறுதி செய்யப்பட வேண்டும்.
- அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் இலவசமாக வழங்குவதையும் மருத்துவம் மற்றும் சுகாதார சேவைகள் இலவசமாக வழங்குவதையும் உத்தரவாதப்படுத்தவேண்டும்.
- பயிர் காப்பீடு திட்டத்தில் இணைந்தவர்களுககு உடனடியாக இன்சூரன்ஸ் தொகை வழங்க வேண்டும். இப்போது அறிவித்த நிவாரணம் புன்செய் பயிர்களுக்கு போதாது அதை உயர்த்திக் கொடுக்க வேண்டும்.
- விஞ்ஞானபூர்வமான நீர் மேலாண்மையை கையாண்டு ஆறு, குளம், கண்மாய்கள், ஏரிகள் உள்ளிட்ட நீர்நிலைகளை உரிய காலமுறை இடைவெளியில் தூர்வார நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.
- ஆறுகள், ஏரிகள், குளங்கள், உள்ளிட்ட நீர்நிலைப் பகுதிகளிலும் கடற்கரைப்பகுதிகளிலும் மணல் சுரண்டலைத் தடுக்க வேண்டும்.
- கட்டுப்பாடற்ற வகையில் கார்ப்பொரேட் ரியல் எஸ்டேட்கள் செயல்படுவதைத் தடுத்து நீர்நிலைகளும் விவசாய நிலங்களும் ரியல் எஸ்டேட் மாஃபியாக்களின் லாபவேட்டைக்கு பலியாவதைத் தடுக்க வேண்டும். ●

# வறட்சி நிவாரணம் கேட்டு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரிடம் மனு

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள வெறியப்பநாயக்கன்பட்டி, உச்சப்பட்டி, கடமனூர் பகுதியில் உள்ள விவசாயிகள், விவாசயத் தொழிலாளர்கள் அதே போன்று அருகில் உள்ள கிராமங்களில் உள்ள விவசாயத் தொழிலாளர்களும் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் நிவாரணம் வழங்கக் கோரியும் மற்றும் பாரதப் பிரதமரின் பயிர் பாதுகாப்பு காப்பீட்டுத் திட்டத்தில் காப்பீடு செய்த விவசாயிகளுக்கும் இழப்பீடு வழங்கக் கோரியும், கிராமங்களுக்கு குடிநீர் கேட்டும், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் வேலை கோரியும் அகில இந்திய விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் (AIKKMS) நிலக்கோட்டை தாலுகா பொறுப்பாளர் தோழர் சின்ராஜ் தலைமையில் மாவட்ட ஆட்சியரிடம் 06.01.2017 அன்று காலை 10 மணியளவில் மனுக் கொடுக்கபட்டது, அம்மனுவில் பாதிக்கப்பட்ட நிலம், கருகிய பயிர், புகைப்படங்கள் இணைத்து கொடுக்கப்பட்டது. அம்மனுவை திண்டுக்கல் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் பெற்றுக்கொண்டு இழப்பீடு வழங்குவதாக உறுதியளித்தார். AIKKMS கிராமப் பொறுப்பாளர்கள், உறுப்பினர்களிடம் அதிகாரிகளிடம் பேசிய விவரங்களைத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்துடன் கூட்டம் நிறைவுற்றது.




ஜனவரி 06, 2017 அன்று வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் நிவாரணம் கேட்டு ஆர்ப்பாட்டம் மற்றும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுக்கும் காட்சி

## மாபெரும் நவம்பர் புரட்சி நூற்றாண்டு விழா

7 நவம்பர், 2016 – 17 நவம்பர், 2017

**S U C I (COMMUNIST)**



# லெனின் முதல்தர தலைவரும், போராட்டத்தில் எவ்வித அச்சமும் கொள்ளாத ஒரு மலைப்பருந்துமாவார்

*நவம்பர் புரட்சியின் நூற்றாண்டையொட்டி லெனின் நினைவுதினத்தை (ஜனவரி 21) அனுஷ்டிக்கும் விதமாக, அவரது மறைவிற்குப்பின் 1924ம் ஆண்டு ஜனவரி 28யில் கிரெம்ளின் இராணுவப் பள்ளியில் தோழர் ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையை தருகிறோம்.*

### லெனின்

தோழர்களே, இன்று மாலை லெனின் நினைவு கூட்டத்தை தாங்கள் ஏற்பாடு செய்துள்ளதை நான் அறிகிறேன். இதில் பேச்சாளர்களில் ஒருவராக என்னை அழைத்துள்ளீர்கள். லெனின் அவர்களது நடவடிக்கைகள் குறித்து குறிப்பிட்ட விதத்தில் உரையாற்ற வேண்டுமென நான் கருதவில்லை. ஒரு மனிதராகவும் தலைவராகவும் லெனின் அவர்களின் குணாதிசயங்களை வெளிக்கொணரும் சில உண்மைகளை முன்வைப்பதுவே சிறந்தது என நான் கருதுகிறேன். இந்த உண்மைகளில் உள்ளீடான தொடர்புகள் இருக்காதிருப்பினும் லெனின் குறித்து ஒரு பொதுவான கருத்தை எய்துவதற்கு அது முக்கியமில்லை. நான் இங்கே பேச உறுதியளித்திருக்கும் இவற்றைத் தவிர இத்தருணத்தில் மேலும் கூற என்னால் இயலவில்லை.

### மலைப்பருந்து

லெனின் அவர்களுடன் நான் முதல்முதலில் பரிச்சயம் பெற்றது 1903யில் ஆகும். இது நேரடியாகவின்றி கடிதத்தொடர்பிலானதாகும். அது என்னில் அழியா உணர்வை ஏற்படுத்தி, எனது கட்சிப்பணிகள் அனைத்திலும் நீங்கா இடம்பிடித்துவிட்டது. அப்பொழுது நான் சைபீரியாவிற்கு கடத்தப்பட்டிருந்த காலம். 1890களின் இறுதியில் லெனின் அவர்களின் புரட்சிகர நடவடிக்கைகளும் குறிப்பாக 1901க்குப் பிறகு இஸ்க்ரா இதழ் வெளிவந்தபின் லெனின் என்ற மனிதர்மூலம் ஒப்பில்லா திறன் கொண்ட ஒருவர் நமக்குக் கிடைத்திருக்கிறார் என்பதை நான் ஏற்றுக்கொள்ள நேர்ந்தது. அப்பொழுது நான் அவரை வெறுமனே கட்சித் தலைவராகக் காணவில்லை. மாறாக, அதன் உண்மையான ஸ்தாபகராகப் பார்த்தேன். ஏனெனில், கட்சியின் ஆன்மாவையும் அதன் அவசரத் தேவைகளையும் அவர் மட்டுமே புரிந்து வைத்திருந்தார். நமது கட்சியின் பிற தலைவர்களான பிளக்னோவ், மார்டோவ், ஆக்ஸல்ராடு மற்றும் பிறரை ஒப்பிடும் பொழுது லெனின் தனது சக தலைவர்களைவிட மிக உயரத்தில் இருந்தார். அவர்களுடன் ஒப்பிடுகையில் அவர் தலைவர்களுள் ஒருவராக அன்றி மிகஉயரிய ஸ்தானத்திலிருந்து போராட்டத்தில் எவ்வித அச்சமும் கொள்ளாத ரஷ்யப் புரட்சிகர இயக்கத்தின் புதியபுதிய பாதைகளிலெல்லாம் கட்சியை தைரியமாக எடுத்துச்செல்பவராக ஒரு மலைப் பருந்தாகத் திகழ்ந்தார். இந்த உணர்வு என்னை மிகவும் ஆட்கொண்டதால் வெளிநாட்டில் அரசியல் தஞ்சமடைந்த நெருங்கிய நண்பர் ஒருவரிடம் தனது கருத்தை பகிரும்படி எழுதினேன்.

சில காலம் கழித்து, சைபீரியாவில் நான் இருந்த வேளையில்– அதாவது 1903இன் இறுதியில்– நான் எனது நண்பரிடமிருந்து மிகுந்த உற்சாகத்துடனான ஒரு கடிதத்தையும் எனது கடிதத்தை அவர் லெனினிடம் காட்டிட நேர்ந்ததால் லெனின் அவர்களே எழுதிய மிகுந்த உணர்வெழுச்சியுடன் கூடிய மிக நேர்த்தியான கடிதத்தையும் கிடைக்கப் பெற்றேன்.

லெனின் அவர்களது கடிதம் ஒப்பீட்டளவில் சிறியதாக இருப்பினும் அதில் நமது கட்சியின் நடைமுறைப் பணிகள் குறித்து தைரியமான, பயமற்ற ஒரு விமர்சனத்தையும் கட்சியின் உடனடியான எதிர்கால பணிகளின் ஒட்டுமொத்த பணித்திட்டம் குறித்த தெளிவான சுருக்கமான விபரமும் வரையப்பட்டிருந்தது. மிக நுணுக்கமான விஷயங்கள் குறித்து லெனின் மட்டுமே இவ்வளவு எளிதாகவும் தெளிவாகவும் தைரியமாகவும் மற்றும் சாதாரணமாகப் பேசுவதைப்போல் அல்லாமல் பாயும் துப்பாக்கித் தோட்டாவைப் போலிருந்தது. லெனின் நமது கட்சியின் ஒரு மலைப்பருந்து என்ற எனது கருத்தை இந்த எளிய, தைரியமான கடிதம் மேலும் வலுப்படுத்தியது. ஒரு மூத்த தலைமறைவு செயல்வீரர் என்ற விதத்தில் எனது பழக்கவழக்கமான பிற கடிதங்களை தீயிட்டு கொளுத்தியதைப்போன்று லெனின் கடிதத்தையும் கொளுத்தியதிலிருந்து என்னை நானே மன்னிக்க இயலாது. லெனின் அவர்களுடன் எனது தொடர்பு அன்றிலிருந்து துவங்கியது.

### பணிவு

ஃபின்லாந்தின் டம்மர்ஃபோர்ஸில் 1905 டிசம்பரில் நடைபெற்ற போல்ஷ்விக் மாநாட்டில் நான் முதலில் லெனினை சந்தித்தேன். நான் நமது கட்சியின் மலைப்பருந்தை காணவிருப்பதையும், ஒரு உயர்ந்த மனிதனை, அரசியல்ரீதியாக மட்டுமின்றி உடல் வாகிலும் பெரிதான ஒருவரை சந்திக்கப்போவதாக நினைத்திருந்தேன். ஏனெனில் எனது கற்பனையில் லெனின் அவர்கள் ஒரு ஜாம்பாவானாகவும் ராஜபார்வையுடனான கம்பீரத் தோற்றத்துடனும் இருப்பவராவார்.

ஆனால் பாருங்கள்! நான் ஏமாந்து போகும் வகையில் நான் கண்டதோ மிக சாதாரணமான மனிதனைப்போன்று குள்ளமாக, சாதாரண ஜீவன்களிலிருந்து உண்மையிலுமே எவ்விதத்திலும் மாறுபாடற்ற ஒருவரை கண்டேன். அதுவும் மக்கள் எல்லோரும் தமது மூச்சை அடக்கிக்கொண்டு "அவர் வருகிறார்.... கப்சிப். அமைதியாக இருங்கள்" போன்ற எச்சரிக்கை முனுமுனுப்புகள் ஒலிக்க ஒரு "மாபெரும் மனிதன்" கூட்டங்களுக்கு காலதாமதமாக வருவது சாதாரண விஷயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. எனவே இந்த சம்பிரதாயம் எனக்கு அதீதமாகத் தோன்றவில்லை, ஏனெனில் அதுஒரு தோற்றத்தையும் மரியாதையையும் உருவாக்குகிறது. எனது ஏமாற்றம் என்னவெனில் மாநாட்டுப் பிரதிநிதிகள் வருவதற்கு முன்பே லெனின் அரங்கத்திற்கு வந்தது, ஒரு மூலையில்போய் உட்கார்ந்து கொண்டு எவ்வித சலனமுமின்றி மாநாட்டின் மிகச் சாதாரண பிரதிநிதியுடன்– மிகச்சாதாரண உரையாடலில் அவர்களிடையே ஈடுபட்டிருந்தார். அப்பொழுது இது எனக்கு ஏதோ சில விதிகளை மீறிவிட்டதாகத் தோன்றியது என்பதை நான் உங்களிடமிருந்து மறைக்கமாட்டேன். லெனின் அவரது இந்த எளிமையும் பணிவும் யாரும் தன்னை கவனிக்காதவிதத்தில் நடக்கும் பாங்கும், தன்னை தனித்துவமாகக் காட்டிக்கொள்வது, தனது உயரிய நிலையை வலியுறுத்தாமலிருப்பது போன்ற இவையே புதிய வெகுஜனங்களின் புதிய தலைவராக மானுடத்தின் எளிமையான சாதாரணமக்களின் தலைவராக லெனின் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதன் முக்கிய அம்சம் என்பதை நான் பின்னரே புரிந்துகொண்டேன்.

### தர்க்கத்தின் சக்தி

இந்த மாநாட்டில் லெனின் நிகழ்த்திய இரு உரைகள் முக்கியமானவை, ஒன்று தற்போதைய நிலைகுறித்ததும் மற்றொன்று விவசாயிகள் கேள்வி குறித்ததும் ஆகும். துரதிருஷ்டவசமாக அவை பாதுகாத்து வைக்கப்படவில்லை. அவை ஒட்டுமொத்த மாநாட்டையும் புயல்போன்ற உற்சாகத்துடனான எழுச்சியூட்டியது. அதிலிருந்த அசாதாரணமான சக்திகொண்ட நம்பிக்கை, தர்க்கத்தின் எளிமையும் தெளிவும் சுருக்கமான எளிதில் புரிந்துகொள்ள இயலும் வாக்கியங்கள் இருந்தன. ஆனால் மிகுந்த மதிமயக்கும் வார்த்தைஜாலங்களும் அன்றாட "பாராளுமன்ற" பேச்சாளர்கள் போன்று அதிர வைக்கும் சொற்றொடர்களும் தோரணைமிக்க பேச்சுக்களும் இல்லாது கவரும்படியாக லெனின் பேச்சுக்கள் இருந்தன.

ஆனால் என்னைக் கவர்ந்தது லெனினின் உரைகளிலிருந்த மேற்கூறிய அம்சமல்ல. நான் லெனின் உரைகளிலிருந்து ஈர்க்கப்படுவதிலிருந்து தப்பிக்கவியலாத தர்க்கத்தினால் கவரப்பட்டேன். அந்தத் தர்க்கமானது நேரடியாக விஷயம் குறித்ததாக இருப்பினும் அவையினரை ஆரத்தழுவியதுடன் அவர்களிடம் உணர்ச்சியூட்டி முழுவதுமாக அவரை ஆட்கொண்டது. பல பிரதிநிதிகள் கூறக் கேட்டிருக்கிறேன்; அவர்கள் சொல்வார்கள், "லெனின் உரைகளிலிருக்கும் தர்க்கம் சக்திவாய்ந்த கொடுக்குகள் போன்று உன்னைச் சுற்றிக்கொண்டு இறுகப் பற்றிக்கொள்ளும், அதன் பிடியிலிருந்து உன்னைக் கிழித்துக் கொண்டுசெல்ல நீ சக்தியற்றவனாகிவிடுவாய்; ஒன்று நீ அதனிடம் சரணடைய வேண்டும் அல்லது உனது தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டும்". லெனின் உரைகளுள் இந்தக் குணாம்சமே ஒரு பேச்சாளர் என்ற முறையில் அவரது பேச்சுக்கலையின் பலமிக்க அம்சமாகும்.

### புலம்பல் இல்லை

நமது கட்சியின் ஸ்டாக்ஹோம் காங்கிரஸில் 1906இல் நான் லெனினை இரண்டாம் முறை சந்தித்தேன். இந்த காங்கிரஸில் போல்ஷ்விக்குகள் சிறுபான்மையாக இருந்து தோல்வியைச் சந்தித்தது தங்களுக்கு நினைவிருக்கும். அப்பொழுதுதான் நான் லெனின் அவர்களை தோல்வியைத் தழுவியவர் என்ற பாத்திரத்தில் முதலில் கண்டேன்.

தோல்வியைத் தழுவி புலம்புவது "மனதை இழந்துவிடுவது" போன்ற தலைவர்கள் போலல்லாத ஒரு தலைவர் லெனின் ஆவார். மாறாக, தோல்வியானது லெனினிடம் அடைக்கிவைக்கப்பட்ட ஆற்றலை ஊற்றெடுத்து பெருகச்செய்து தனது ஆதரவாளர்களை புதிய யுத்தங்களுக்கு ஆயத்தமாக்கி எதிர்கால வெற்றியைநோக்கி பயணிக்க எழுச்சியூட்டியது.

லெனின் தோற்கடிக்கப்பட்டார் என்று நான் கூறினேன். ஆனால் எத்தகைய தோல்வி அது? அவரது எதிராளிகளை நீங்கள் பார்த்திருக்க வேண்டும், அதாவது ஸ்டாக்ஹோம் காங்கிரஸில் வெற்றிபெற்றவர்களான பிளக்னோவ், ஆக்ஸல்ராடு, மார்டோவ் மற்றும்பிறர் வெற்றி பெற்றதன் சிறிய சாயல்கூட அவர்களிடம் இல்லை. சொல்லவேண்டுமென்றால் மென்ஷிவிசம் குறித்த லெனினின் ஈவிரக்கமற்ற விமர்சனம் அவர்களை நொருங்கச்செய்தது. போல்ஷ்விக் பிரதிநிதிகளாகிய நாங்கள் ஒன்றாக ஒரு குழுவாகக்கூடி லெனினின் முகத்தை பார்த்துக்கொண்டு அவரிடம் ஆலோசனை கேட்டதை நினைவுகூறுகிறேன். சில பிரதிநிதிகளின் உரைகள் நம்பிக்கையின்மையையும் விரக்தியையும் காண்பித்தன. இவ்வுரைகளுக்கு லெனின் தன் பற்களை கடித்துக்கொண்டு பதில் கூறுகையில் "அழுதுபுலம்பாதீர்கள் தோழர்களே, நாம் சரியாகையில் நிச்சயம் நாம் வெல்வோம்".

அழுதுபுலம்பும் அறிவுஜீவிமீது வெறுப்பு, நமது பலத்தின்மீது நம்பிக்கை, வெற்றியின்மீது நம்பிக்கை ஆகிய இவற்றையே லெனின் எங்களிடம் எடுத்துரைத்தார். போல்ஷ்விக்குகளின் தோல்வி தற்காலிகமானது என்பதும், விரைவிலேயே அவர்கள் வெல்வது உறுதி என்பதும் உணரப்பட்டது.

"தோல்வியைக் கண்டு அழுதுபுலம்புவது இல்லை"– லெனினின் இந்த குணாம்சமே தன்னைச் சுற்றி இறுதிவரை நம்பிக்கை கொண்டவர்களின் படையையும் அதன் பலத்தில் நம்பிக்கையையும் ஊட்டியது.

### பீற்றிக்கொள்ளல் இல்லை

லண்டனில் 1907இல் நடைபெற்ற அடுத்த மாநாட்டில் போல்ஷ்விக்குகள் வெற்றியைக் கண்டனர். ஒரு வெற்றியாளராக நான் அப்பொழுது தான் லெனினை முதன்முதலில் கண்டேன்.

வெற்றியென்பது சில தலைவர்களை தலைசுற்ற வைத்து, அவர்கள் தமது பெருமையை பீற்றிக்கொள்பவர்களாகவும் தலைக்கணம் பிடித்தவர்களாகவும் ஆக்கும். பெரும்பாலான நேரங்களில் அவர்கள் வெற்றிவாகை சூடியவர்களாக அதன் பெருமையில் ஊறித்திளைப்பர்.

ஆனால் லெனின் இதுபோன்றத் தலைவர்களை ஒத்திருக்கவில்லை. மாறாக, வெற்றிக்குப்பின்தான் குறிப்பாக அவர் மிகவும் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருப்பார். பிரதிநிதிகளிடம் லெனின் உரக்கக் கூறுவார்: "முதலாவதாக வெற்றிக் களிப்பில் போதை தலைக்கேறுவதும் பெருமை பீற்றிக்கொள்வதும் கூடாது; இரண்டாவதாக நாம் வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்; மூன்றாவதாக எதிராளி தோற்றிருக்கிறானேயொழிய அவன் நசுக்கப்படவில்லை, ஆதலால் அவன்மீது இறுதித் தாக்குதல் தொடுக்கவேண்டும்". "தற்பொழுது மென்ஷ்விக்குகள் ஓழிந்தனர்" என்று வாய்க்கிழிய பேசும் பிரதிநிதிகளை லெனின் எள்ளி நகையாடுவார். பாட்டாளி வர்க்க இயக்கத்தில் மென்ஷ்விக்குகளுக்கு இன்றும் வேர் இருக்கிறது என்பதையும் அவர்களை திறன் கொண்டு போரிடவேண்டும் என்பதையும் தனது சொந்த பலத்தை அதீதமாக மதிப்பீடு செய்வதும் குறிப்பாக எதிரியின் பலத்தை குறைத்து மதிப்பீடு செய்வதும் தவிர்க்கப்படவேண்டும் என்பதையும் லெனின் எடுத்துக்காட்டினார்.

"வெற்றியில் பீற்றிக்கொள்ளாதிருத்தல்"– லெனினின் குணாம்சத்தின் இந்த அம்சம் எதிரியின் பலத்தை கணிக்கவும் கட்சியை திடீர் ஆச்சரியங்களிலிருந்து பாதுகாக்கவும் உதவியது.

### கோட்பாடுமீது பற்று

கட்சித் தலைவர்கள் தமது கட்சியின் பெரும்பான்மை கருத்தை மதிக்காமலிருக்கமுடியாது. பெரும்பான்மை என்பது ஒரு தலைவர் நிச்சயம் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டிய ஒரு சக்தியாகும். வேறு எந்தத்தலைவரையும்விட இது லெனினுக்கு சற்றும் குறைவில்லாமல் நன்றாகத் தெரியும்.

ஆனால் லெனின் அவர்கள் பெரும்பான்மைக்கு ஒருபோதும் அடிபணிந்ததேயில்லை, குறிப்பாக அது கோட்பாடற்றிருந்தால். பெரும்பான்மையானோரின் கருத்தோ அல்லது கட்சியின் உடனடி நலன்களோ பாட்டாளிவர்க்கத்தின் அடிப்படை நலன்களுடன் மோதும் சூழ்நிலை நமது கட்சியின்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# புரட்சிகர எழுச்சிகளின் கலையில் மிகச்சிறந்த ஆசானுமாவார் லெனின்

3ம் பக்கத் தொடர்ச்சி

வரலாற்றில் அவ்வப்பொழுது நிகழ்ந்துள்ளது. அந்த வேளைகளிலெல்லாம் லெனின் அவர்கள் கட்சியின் பெரும்பான்மை கருத்தைவிட கோட்பாட்டிற்கு ஆதரவாக எவ்வித் தயக்கமுமின்றி தீர்மானகரமாக நிற்பார். மேலும், இதுபோன்ற சூழலில் அனைவருக்கும் எதிராக தான் தனித்து நிற்க வேண்டிவரும்பொழுதும்கூட அவர் அஞ்சிய தில்லை– அவர் அடிக்கடி கூறுவதுபோல– “சரியான கோட்பாட்டின் அடிப்படையிலான கொள்கை மட்டுமே சரியான கொள்கையாகும்”.

இந்த குணாதிசயத்தில் இரண்டு உண்மைகள் உள்ளன. முதல் உண்மை, 1909–1911 காலகட்டத்தில் கட்சி எதிர்புரட்சியால் முற்றிலும் நொறுக்கப் பட்டபின் முழுமையான உடைதலை நோக்கிச் சென்றது. அது கட்சியில் நம்பிக்கையற்ற காலகட்டமாகும், கட்சியிலிருந்து பெரும் எண்ணிக்கையில் வெளியேறும் காலம், அறிவுஜீவிகள் மட்டுமின்றி, தொழிலாளர்களில் சிலரும் வெளியேறினர். ஒரு சட்டவிரோத அமைப்பின் தேவை மறுக்கப்பட்ட காலம், கட்சியை கலைப்பது, உடைப்பது என்பதாகிய காலகட்டம். பாட்டாளிவர்க்க இயக்கத்திலிருந்து பிரிந்துசென்று மென்ஷ்விக்குகள் மட்டுமல்லாது, பல்வேறு கோஷ்டிகளும் போக்குகளும்கொண்ட போல்ஷ்விக்குகளும்கூட இதில் அடங்குவர். அப்பொழுதுதான் சட்டவிரோத அமைப்பை முழுவதையும் கலைத்துவிட்டு தொழிலாளர்களை சட்டபூர்வ லிபரல் ஸ்டோலிபின் கட்சியில் ஒருங்கிணைப்பது என்ற கருத்து தோன்றியது என்பதை தாங்கள் அறிவீர்கள். லெனின் ஒருவர் மட்டுமே அப்பொழுது எங்கும் பரவிய தொற்றுநோய்க்கு பலியாகாமல் கட்சியின் கோட்பாட்டை உயர்த்திப்பிடித்ததுடன் சிதறிய, நொறுங்கிய கட்சியின் சக்திகளை வியப்பூட்டும் பொறுமையுடன் அசாதாரண தொடர்முயற்சியுடன், பாட்டாளிவர்க்க இயக்கத்தினூடே புகுந்திருக்கும் ஒவ்வொரு கட்சிவிரோத நிகழ்வுப் போக்கையும் எதிர்த்துப் போரிட்டு எப்பொழுமில்லாத தைரியம், பொறுமையுடன் கட்சிக் கோட்பாட்டை தற்காத்தார். கட்சிக் கோட்பாட்டிற்காக லெனினின் இந்தப் போராட்டத்தில் அவர் வெற்றிபெற்றார் என்பதை நாம் அறிவோம்.

இரண்டாவது உண்மை, 1914 முதல் 1917 வரையிலான ஏகாதிபத்தியப் போர் முழுவீச்சில் இருந்தபொழுது கிட்டத்தட்ட அனைத்து சமூக ஜனநாயக, சோசலிசக் கட்சிகளும் பொதுவான தேசியவாத வெறியில் பலியாகி அந்தந்த நாடுகளில் ஏகாதிபத்தியத்திற்கு சேவைசெய்ய தங்களை சமர்பிக்கத் தொடங்கினர். இரண்டாவது அகிலம் முதலாளித்துவத்திற்கு ஆதரவாக தனது வண்ணத்தை மாற்றிக் கொண்டது. பிளக்கனோவ், காவுட்ஸ்கி, குவஸ்டே மற்றும்பிறர் தேசிய வெறிவாத பேரலையிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள இயலவில்லை. அவ்வேளையில் லெனின் ஒருவர் மட்டுமே, ஏறக்குறைய அவர் மட்டுமே, சமூக வெறிவாதம், சமூக அமைதிவாதம் ஆகியவற்றிற்கு எதிராக தீர்மானகரமாக போராடியதோடு குவிஸ்டேகள், காவுட்ஸ்கிகளின் துரோகத்தை தூற்றியதோடு “புரட்சியாளர்களின்” அரைமனது தன்மையையும் சாடினார். மிகச்சிறிய சிறுபான்மை எண்ணிக்கையுள்ளோரே தன்னை ஆதரிக்கின்றனர் என்பது லெனினுக்கு தெரியும், இருப்பினும், சர்வதேசியவாதம் அதாவது கோட்பாட்டினடிப்படையிலான கொள்கையே சரியான கொள்கை என்பதே தனக்கு எதிர்காலம்கொண்ட சரியான கொள்கை என்பது அவருக்கு தெரியுமாதலால் அது தீர்மானகரமான தருணம் இல்லை என்பதும் அவருக்குத் தெரியும். புதிய சர்வதேசியம் என்பதன் போராட்டத்திலும் லெனினே வெற்றிபெற்றார் என்பதை நாம் அறிவோம்.

“கோட்பாட்டின் அடிப்படையிலான கொள்கையே ஓரே சரியான கொள்கை”– இந்த சூத்திரத்தை கொண்டே லெனின் தாக்குதல் தொடுத்து புதிய வெல்லற்கரிய தகுதியை அடைந்து பாட்டாளி வர்க்கத்தின் சிறந்த நபர்களை புரட்சிகர மார்க்சிசத்தின் பக்கம் வென்றெடுத்தார்.

## வெகுஜனங்கள்மீது நம்பிக்கை

நாடுகளின் வரலாற்றை தெரிந்துவைத்திருக்கும், புரட்சிகளின் வரலாற்றை ஆரம்பம்முதல் முடிவுவரை புரட்டிப்போடும் கருத்தியல்வாதிகளும் கட்சித்தலைவர்களும் ஒருவிதமான மானமற்ற நோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். இது வெகுஜனங்களைக்கண்டு அஞ்சும், அவர்களின் ஆக்கசக்தியின்மீது நம்பிக்கையற்றிருக்கும் ஒருவிதமான நோயாகும். புரட்சியின் வரலாறு தெரியாதவர்களாக இருப்பினும், பழைய ஒழுங்கை அழித்து புதிய ஒழுங்கை ஏற்படுத்த வல்லவர்களான வெகுஜனங்கள்மீது இந்தத் தலைவர்களுக்கு ஒருவிதமான ராஜபீட உணர்வை உருவாக்குகிறது.

இந்த ராஜபீட உணர்வென்பது மக்கள் திடீரென கலவரம்செய்து “அதீதமாக அழித்துவிடுவர்” என்ற பயத்தால் வருவதாகும். மேலும் வெகுஜனங்களுக்கு புத்தகங்களிலிருந்து தாம் கற்றவற்றை கற்றுத் தருவதற்கு ஒரு ஆசிரியன் என்ற பங்கை தான் ஆற்ற விரும்புவதாலும் வெகுஜனங்களிடமிருந்து தான் கற்பதற்கு விரும்பாததாலும் வருவதாகும். இத்தகைய தலைவர்களுக்கு லெனினே எதிர்வினையாவார்.

பாட்டாளி வர்க்கத்தின் ஆக்கசக்தி மீதும் அதன் வர்க்க உள்ளுணர்வின் புரட்சிகர செயல்திறன் மீதும் லெனின் அளவிற்கு மிகுந்த நம்பிக்கை கொண்டவர் வேறு எந்த புரட்சியாளராவது இருக்கிறாரா என்பது எனக்குத் தெரியாது. “புரட்சியின் குளறுபடிகள்” மற்றும் வெகுஜனங்களின் “அங்கீகரிக்கப்படாத கலவரச் செயல்கள்” குறித்து விமர்சிப்போரை வேறுஎந்த புரட்சியாளராவது லெனின் அளவிற்கு ஈவிரக்கமற்ற விதத்தில் சாடியிருப்பாரா என்பதும் எனக்குத் தெரியாது. ஒரு விவாதத்தின்போக்கில் ஒரு தோழர் “புரட்சியைத் தொடர்ந்து ஒழுங்கான விஷயங்கள் நடக்கவேண்டும்” என்று சொன்னார். அதற்கு லெனின் அவர்கள், “புரட்சியாளராக விரும்புவோர் வரலாற்றில் மிக ஒழுங்காக நடக்கும் விஷயங்கள் என்பதே புரட்சிகர ஒழுங்கின் அடிப்படையில் நடக்கும் விஷயங்கள் என்பதை மறந்துவிடுவது பரிதாபத்திற்குரியதாகும்” என்று எள்ளி நகையாடினார்.

எனவே, வெகுஜனங்களை மெலெழுந்தவாறு பார்த்துக்கொண்டு அவர்களுக்கு புத்தகங்களிலிருந்து பாடமெடுக்க முயற்சிப்போரை லெனின் அவமதித்தார். எனவே, லெனின் எப்பொழுதும் கூறுவது யாதெனில், வெகுஜனங்களிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள், வெகுஜனங்களின் நடவடிக்கைகளை புரிந்துகொள்ள முயலுங்கள், அவர்களது போராட்டத்தின் நடைமுறை அனுபவத்திலிருந்து கவனமாக கற்றுக்கொள்ளுங்கள். மக்களின் ஆக்கசக்திமீது நம்பிக்கை வையுங்கள்– லெனினின் இந்த அம்சமே தன்னெழுச்சியான நிகழ்வுப்போக்கை புரிந்துகொண்டு அதன் போராட்டத்தை பாட்டாளி வர்க்க புரட்சியை நோக்கி திசைமாற்ற உதவிபுரிந்தது.

## புரட்சிகர மேதைமை

லெனின் புரட்சிக்காகவே பிறந்தவராவார். உண்மையிலேயே, அவர் புரட்சிகர எழுச்சிகளை புரிந்துகொள்ளும் மேதைமையையும் புரட்சிகரத் தலைமையை கைகொள்ளும் கலையைக் கற்ற மாபெரும் ஆசானும் ஆவார். புரட்சிகர எழுச்சிகளின் பொழுதைவிட வேறெப்போதும் மிகுந்த சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் அவர் இருந்ததில்லை. இதன் பொருள், அவர் அனைத்து புரட்சிகர எழுச்சிகளையும் சமவிகிதத்தில் ஒப்புதலளிப்பாரென்றும் எப்பொழுதும் அனைத்து சூழ்நிலைகளிலும் அவர் புரட்சிகர எழுச்சிகளை ஆதரிப்பாரென்றும் நான் கூறவில்லை. இல்லவேயில்லை, நான் கூற வந்தது என்னவென்றால் புரட்சியின் எழுச்சிகள் வரும்போதெல்லாம் லெனினின் மேதைமை முழுவதுமாகவும் தனிச்சிறப்புவாய்ந்த வகையிலும் வெளிவரும் என்பதேயாகும்.

புரட்சியின் போதெல்லாம் ஏதோ அது அவரது கைகளில் தவழ்வது போன்று அவர் பூத்துக்குலுங்குவதோடு, ஆசீர்வதிப்பவராகி வர்க்கங்களின் போக்கு மற்றும் புரட்சியின் நெளிவு சுளிவுகளையும் கணித்து வழிகாட்டுபவராக ஆகிவிடுவார். “நீரில் மீன் நீந்துவதைப்போல் புரட்சிஅலையில் லெனின் நீந்துவார்” என நமது கட்சி வட்டாரங்களில் கூறப்படுவதற்கு இதுதான் காரணமாகும். இதனாலேயே லெனினின் புரட்சிகரயுத்தத்திற்கான கோஷங்கள் “சாலச்சிறந்ததாகவும் புரட்சிகர திட்டமிடலில் “அதிரவைப்பதான” தைரியமும் இருக்கிறது. லெனினின் இந்த குணாதிசயத்தை வெளிப்படுத்தும் இரு உண்மைகளை நான் நினைவுபடுத்துகிறேன்.

முதலாவது உண்மை, அக்டோபர் புரட்சிக்கு முந்தைய காலகட்டம் அது. அப்பொழுது லட்சோபலட்ச தொழிலாளர்கள், விவசாயிகள், சிப்பாய்கள், போர் தளத்தின் முன்னும் பின்னும் ஏற்பட்ட கடும் நெருக்கடியால் சமாதானத்தையும் விடுதலையையும் கோரினர். தளபதிகளும் பூர்ஷ்வாக்களும் “போரை முடிவுக்கு கொண்டுவந்து ஒரு இராணுவ சர்வாதிகாரத்திற்காக வேலை செய்து கொண்டிருந்தனர். ஒட்டுமொத்த “பொதுக்கருத்து” என்றழைக்கப்படுவதும் அனைத்து “சோசலிசக் கட்சிகள்” என்றழைக்கப்படுபவையும் போல்ஷ்விக்குகளுக்கு எதிராக திரும்பி அவர்களை “ஜெர்மனியின் உளவாளிகள்” என்ற முத்திரை குத்திவந்தனர். போல்ஷ்விக் கட்சியை தலைமறைவுக்கு விரட்டிவிட கிரென்ஸ்கி– ஏற்கனவே அதில் ஓரளவிற்கு வெற்றியும் பெற்று விட்டார்– முயற்சி செய்தார். இன்னமும் சக்தி கொண்டுள்ள ஒழுங்கமைந்த ஆஸ்டிரிய– ஜெர்மன் கூட்டு இராணுவங்கள் நமது வலுவிழந்த, உடைந்து நொறுங்கும் இராணுவத்தை போரிட்டு வந்தன. மேற்கு ஐரோப்பிய “சோசலிஸ்டுகள்” தமது அரசாங்கங்களுடன் ஒட்டுறவோடு “போரில் ஒட்டுமொத்த வெற்றிக்காக” கூட்டணியை வைத்துக் கொண்டிருந்தனர்.

மேற்கூறிய பொழுதில் ஒரு எழுச்சியைத் துவக்குவது என்பதன் பொருள் என்ன? இத்தகையதொரு சூழலில் ஒரு எழுச்சியை உருவாக்குவது என்பது அனைத்தையும் பணயம் வைப்பதாகும். ஆனால் லெனின் இந்த ஆபத்தைக்கண்டு அஞ்சவில்லை. ஏனெனில், அவரது ஞானக்கண்ணுக்கு தெரிந்தது யாதெனில் ஒரு எழுச்சி தவிர்க்கமுடியாததாகும். அது வெற்றியடையும், ரஷ்யாவில் ஏற்படும் ஒரு எழுச்சி ஏகாதிபத்தியப் போரை முடிவுக்குக் கொண்டு வரும், அது போரினால் துவண்டுபோய்விட்ட மேற்கத்திய மக்களை தட்டியெழுப்பும், அது ஏகாதிபத்தியப் போரை உள்நாட்டுப் போராக மாற்றும், அவ்வெழுச்சி சோவியத் குடியரசு மலர வழிவகுக்கும், சோவியத் குடியரசு உலகமுழுவதும் புரட்சிகர இயக்கத்திற்கு கோட்டையாகத் திகழும். லெனினின் புரட்சிகர முன்னோக்குப் பார்வை பின்னர் ஈடிணையற்ற வகையில் மிகச்சரியாக நிரூபணமானது.

இரண்டாவது உண்மை, அக்டோபர் புரட்சியின் முதலாவது நாட்களில் மக்கள் கமிஸார்களின் கவுன்சில் போர்ப்படைக் கமாண்டரான தளபதி துகோனினை சண்டையை நிறுத்தி ஜெர்மானியர்களோடு பேச்சுவார்த்தையை துவக்குமாறு வலியுறுத்தி வந்தது. லெனின், கிரிலென்கோ (எதிர்கால போர்படை கமாண்டர்) மற்றும் நான் (ஸ்டாலின்) பெட்ரோகிராடில் துகோனினுடன் தொலைபேசியில் பேசச்சென்றோம். அது ஒரு பாதகமான சூழ்நிலை. துகோனினும் போர்தலைமையகமும் மக்கள் கமிஸார்களின் கவுன்சிலின் உத்தரவை ஏற்க திட்டவட்டமாக மறுத்துவிட்டனர். படைஅதிகாரிகளும் போர் தலைமையகத்தின் பேச்சையே கேட்டுவந்தனர். சோவியத்துக்களுக்கு விரோதமாக இருந்த இராணுவ அமைப்புக்களின் கட்டுப்பாட்டிலுள்ள ஒருகோடியே நாற்பதுலட்ச சிப்பாய்கள் யார் சொல்வதை கேட்பார்கள் என்பதை யாராலும் சொல்லமுடியாது. பெட்ரோகிராடில் மட்டுமே எங்களுக்குத் தெரிந்த வரையில் ஒரு இராணுவ சிப்பாய் கலகம் கனகனத்துக் கொண்டிருந்தது. மேலும் கிரென்ஸ்கி பெட்ரோகிராடை நோக்கி முன்னேறினார். ஒரு கணப்பொழுது அமைதிக்குப்பின் லெனினின் நேரடி கம்பித் தொடர்பிலிருந்த முகத்தில் ஒரு பிரகாசம் தெரிந்தது எனக்கு நினைவுக்கு வருகிறது. அவர்ஒரு முடிவுக்கு வந்துவிட்டார் என்பது தெளிவு. “நாம் கம்பியற்ற தொலைதொடர்பு நிலையத்திற்கு செல்வோம்” என்றார் அவர். “அது நமக்குத் துணைபுரியும்”, தளபதி துகோனின்னை பணிநீக்கும் ஒரு சிறப்பு உத்தரவை பிறப்பிப்போம், அவரிடத்தில் தோழர் கிரோலென்கோவை போர்படை கமாண்டராக நியமனம்செய்து சிப்பாய்கள் தமது தளபதிகளை சூழ்ந்துகொள்ளுமாறும், சண்டையை நிறுத்துமாறும், ஆஸ்டிரிய–ஜெர்மன் சிப்பாய்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் சமாதானத்தை தங்களது சொந்த கைகளில் எடுத்துக்கொள்ளுமாறும் அறைகூவல் விடுவோம்” என்றார் லெனின்.

இது “இருட்டில் பாய்வதற்கு ஒப்பாகும்”. ஆனால் லெனின் இந்த “பாய்தலிலிருந்து” பின்வாங்கவில்லை, அவர் அதை மிகுந்த ஆர்வத்துடன் செய்தார், ஏனெனில் இராணுவத்திற்கு சாமாதானம் வேண்டுமென்பதும் அது தனது பாதையில் அனைத்துத் தடைகளையும் உடைத்து அதனை சாதிக்கும் என்பதும் இத்தகைய விதத்தில் சமாதானத்தை நிறுவினால் அது ஆஸ்டிரிய–ஜெர்மன் சிப்பாய்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதும் விதிவிலக்கின்றி அனைத்துத் தரப்பிலும் சமாதானத்தை விரும்புவோருக்கு முழு சுதந்திரத்தை வழங்கும் என்பதும் அவர் அறிந்ததே. இங்கும் லெனினின் புரட்சிகர தூரப்பார்வை மிகச்சரியாகவே உறுதிபடுத்தப்படும் என்பது நமக்குத் தெரியும்.

தனது மேதைமையினால் விளைந்த ஆழமான புரிதல், அதிவேகமாக விஷயங்களைப் புரிந்துகொள்வதிலுள்ள திறன், வரவிருக்கும் நிகழ்வுகளை முன்கூட்டியே கணித்தல் ஆகிய லெனினின் இந்த குணாதிசயங்கள் சரியான தந்திரத்தை கையாளவும் புரட்சிகர இயக்கத்தின் திருப்புமுனைகளில் ஒரு தெளிவான பாதையையும் அவரால் வகுக்க முடிந்தது.

*(ஸ்டாலின் தேர்வு நூல், தொகுதி 6, பக்கம் 54–56)*

## மத்தியக்கிழக்கு மற்றும் அதனைச் சுற்றியிருக்கும் நாடுகள்

# ஏகாதிபத்திய கொள்ளையர்கள் மனிதப்பண்புகளில் ஆழமான நெருக்கடியை ஏற்படுத்தும் வன்முறை உலைக்களத்தை உருவாக்கிக்கொண்டிருக்கின்றனர்

*எண்ணற்ற அரேபிய பழங்குடியினரின் தாய் மண்ணாக விளங்கிய மேற்காசியா மற்றும் வட ஆப்பிரிக்காவை சுற்றியுள்ள மற்றும் மத்தியக் கிழக்கு என்றழைக்கப்படும் உலகின் மிகப்பரந்த பிராந்தியமானது, இப்போது பல அரபு நாடுகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. அது ஆரம்பகாலத்தின் சில உயரிய மனித நாகரிகங்கள் பேணி வளர்க்கப்பட்ட ஒரு மாபெரும் பாரம்பரியத்தைக்கொண்ட மண்ணாகும். அது போரிட்டுக்கொண்டிருக்கும் பழங்குடியினத்தவரிடையேயான தொடர்ச்சியான சச்சரவுகளைக் கொண்ட மற்றும் ரத்த ஆறு ஓடிய ஒரு மண்ணாகவும் இருந்தது. இப்போதைய உலக அரங்கில், இப்பகுதியானது நீண்ட நெடிய வருடங்களாக சூழ்ச்சி, அத்துமீறல், பொருட்களைச் சூரையாடுதல், மனிதப் பேரழிவு மற்றும் அதனையொட்டிய பிரச்சினைகளைக் கொண்டதாகவே தொடர்ந்து கொண்டிருக்கின்றது. வெளிப்படையாகவே, இத்தனையாண்டுகாலமாக இன்னல்களுக்குள்ளாகி வந்து கொண்டிருக்கும் பரிதாபத்திற்குரிய வயதானவர்கள் முதல் பச்சிளம் குழந்தைகள் வரையிலான நிராதரவற்ற மக்களே வருந்தத்தக்க முறையில் அதற்குப் பலியானார்கள். அண்மையில் நிகழ்ந்த சம்பவங்கள் மற்றும் சமீபத்திய வளர்ச்சிகளினடிப்படையில் இந்நெருக்கடியின் தன்மை குறித்து, அதாவது இது ஏன் உருவாயிற்று? யார் இதன் குற்றவாளி? இது எதில் முடிவடையும்? என்பதை இங்கு இக்கட்டுரையில் ஒருமுகப்படுத்தி விவாதித்திட விழைகின்றோம்.*

### அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான ஏகாதிபத்திய சக்திகளினால் உருவாக்கப்பட்ட வட்டார மற்றும் பகுதிப் போர்கள்

மிகப்பெரும், செல்வாக்கு மிகுந்த ஊடகங்கள் தற்போது நிகழ்ந்து வரும் பல்வேறு மத மற்றும் இனங்கள் சம்மந்தப்பட்ட மோதல்களை உள்நாட்டுப் போர் எனவும் அல்லது பிரிவினைவாதப் போர் எனவும் முன்வைக்கின்றன. ஆனால் கவனமாகப் பார்த்தோமேயானால், இப்போர்ககள் யாவும் பதவி வெறிபிடித்த, லாப வேட்கைகொண்ட, பழிபாவத்திற் கஞ்சாத, மனித இனத்தின் மிகக்கொடிய விரோதியான ஏகாதிபத்திய சக்திகளால் நடத்தப்படும் மனித இனத்தின் மீதான கொடுந்தாக்குதல்களாக இருப்பதை தவறாமல் காணலாம். இத்தகைய போர்களானது, அவர்களது ஆணைகளை ஏற்க மறுக்கும் நாட்டின் ஆட்சிகளை நிலைகுலையச் செய்திடுவதற்காக, முடிந்தவரை ஒவ்வொரு தந்திரத்தையும் கையாண்டு சகோதரத்துவ மோதல்கள், இனச் சச்சரவுகள் மற்றும் வன்முறைகளில் முடியும் நிகழ்வுகளை எவ்வித எதிர்ப்புமின்றி அந்நாடுகளில் ஏற்படுத்தி இவர்களின் இராணுவ பலத்தின் சக்தியினை காண்பிப்பதாகவே இருக்கின்றது.

வட்டாரப்போர்களும் அவ்வப்போது நடக்கும் பகுதிப்போர்களும் மற்றும் பிற ஆட்சிக்கவிழ்ப்பு நடவடிக்கைகளும், அவர்களது இராணுவப் பயிற்சி மற்றும் ஆட்சிக்கவிழ்ப்பு செயல்பாடுகள் உள்ளிட்ட மற்றும் பணம் வழங்குதல், ஆயுதங்கள் வழங்குதல், கூலிப்படையினரை ஏவிவிடுதல் போன்றவைகளால் தூபமிட்டு வளர்க்கப்பட்டு, முன்னேற்பாடுடன், திட்டமிட்டு, வடிவமைக்கப்பட்டு நடைபெறுபவனவாகும். இவை யாவும், அவர்களது ஆதிக்கத்தை நிறுவிட, இராணுவ பலத்தை பிரயோகித்து தத்தம் பொருளாதார–அரசியல் செல்வாக்கினை–மேலாதிக்கத்தினை நீட்டித்துக்கொள்ளவும் அல்லது பராமரித்துக்கொள்ளவும் இன்றைய மிகப்பெரும் போர் வெறிகொண்ட அமெரிக்க ஏகாதிபத்திய தலைமையின்கீழான ஏகாதிபத்தியவாதிகளால் செய்யப்படுகின்றன.

சமீபத்தில் அவர்கள் தீட்டியுள்ள ஒரு திட்டமானது அப்பட்டமாக வெளிப்பட்டிருக்கின்றது. எப்போதெல்லாம் எதிர்ப்பு கிளம்புகின்றதோ அல்லது எதாவது ஒரு நாட்டின் அரசு அமெரிக்க ஆட்சியாளர்களோடு இணங்கிப்போகாமல் தங்களது சொந்த வழியில் செல்ல முடிவெடுக்கின்றதோ அப்போதெல்லாம் ஏகாதிபத்தியவாதிகள் அவர்களுக்கு சேவகம் புரிகின்ற ஊடகத்தின் ஒரு பிரிவினர், அவர்களது கூட்டாளிகள் மற்றும் அடிவருடிகள் ஆகியோரின் உதவியுடனும் உடந்தையுடனும் அல்லது அந்நாட்டு ஏஜண்டுகளின் உதவியுடனோ அல்லது உதவியில்லாமலோ ஏதேனுமொரு பொய்யான அல்லது மோசடியான போலிக் காரணத்தைக் காட்டி, உதாரணமாக பேரழிவு ஆயுதங்கள் வைத்துக்கொண்டு அதனை பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர் என்றோ அல்லது மனித உரிமைகளை மீறுகின்றனர் என்று கூறி அத்தகைய ‘அடிபணிய மறுக்கும் எதிரியை’ தூக்கியெறிய வேண்டுமென்ற முயற்சியில் உடனடியாக கூக்குரல் எழுப்புகின்றனர். இதனால் 2014ஆம் ஆண்டு இரான் நாட்டுத் தலைவர் ஒருமுறை, “அமெரிக்கா தனது சொந்த கண்மூடித்தனமான ஆதரவாளர்களை ஆட்சியிலமர்த்திடுவதை நோக்கமாகக்கொண்டிருக்கின்றது” என்று அந்த அளவிற்கு குறிப்பிட்டார். அதன் நோக்கத்தில், ஏகாதிபத்தியவாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்களால் முத்திரை குத்தப்பட்ட உள்நாட்டுப்போர் அல்லது பிரிவினைவாதப்போர் என்ற ஒரு போர் என்பது நீண்ட காலமாக தொடர வேண்டியிருந்தது.

### மானுடத்தின் மீது இழைக்கப்படும் மன்னிக்கமுடியாத குற்றம்

அத்தகைய போர்கள் லட்சோபலட்சம் அப்பாவி மக்களின் உயிர்களைப் பறித்து வேரோடு சாய்த்துவிட்டது. அத்தகைய போர்கள் சொத்துக்களை அழித்தொழித்து, நாட்டை சின்னாபின்னமாக்கி, அதன் மக்கள் மீது மிகப்பெரும் துன்பம் இழைத்துவிட்டன. அதன் பின்னர், நேரடியான ஆக்கிரமிப்பு அல்லது மிக மோசமான பொய்களை உருவாக்கி, ஜனநாயகத்தையும் ஒழுங்கினையும் மீட்டெடுக்கின்றோம் என்றும், மறு சீரமைப்பு மேற்கொள்கிறோம் என்று கூறிக்கொண்டும் தங்களின் பேரழிவு புதிய காலனியாதிக்க சுரண்டல் திட்டத்துடன் ஏகாதிபத்தியவாதிகள் அதில் பலியாகிப்போன மக்களையும் சின்னாபின்னாமாகிய நாட்டையும் கபளீகரம் செய்கின்றனர்.

இத்தகைய போர்கள் நடைபெறும் போக்கில், ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களுக்கு ஒத்திசைந்து போகும் ஊடகங்களும் போர்க்குற்றங்களை புரிகின்றன என தாங்கள் தேர்ந்தெடுக்கும் சக்திகள் மீது குற்றம் சுமத்துகின்றன; இருந்தபோதிலும், அவர்களே, குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளே அதற்கு நீதிபதிகளாகவும், ஆணையிடுபவர்களாகவும் மற்றும் தண்டனை நிறைவேற்றுபவர்களாகவும் இருக்கின்றனர். அமெரிக்க ஏகாதிபத்தியம்தான் இந்த ஒருதுருவ உலக (Unipolar World) ஏகாதிபத்திய கொள்ளையர்களின் ஒரே முடிமன்னராக திகழ்ந்துகொண்டு, மானுடத்தின் மீது இழைக்கப்படும் குற்றங்களுக்கு பதில் கூறுவதிலிருந்து நிரந்தரமாக விலக்களிக்கப்பட்டு தப்பித்து கொண்டிருக்கின்றது.

ஈராக் ஆக்கிரமிப்பு, லிபியாவில் நடந்த இராணுவத் தாக்குதல், ஆப்கான் நாட்டின் உள்நாட்டுப்போர், சிரியாவில் நடந்த ஆசாத் ஆட்சிக்கு எதிரான சதித்திட்டத்தினாலான கிளர்ச்சி, லெபனான் மீதான அமெரிக்க ஆதரவு இஸ்ரேலின் கொலை பாதகத் தாக்குதல், பாலஸ்தீன மக்களுக்கெதிரான இஸ்ரேலின் நீண்ட ஆயுதம் தாங்கிய பகைமை, அமெரிக்க ஆதரவுடனான இனப்போர் மற்றும் அதன் விளைவாக சூடான் பிளவுவுண்டது, அமெரிக்க ஆதரவுடன் சவுத்அரேபிய நாடு ஏமன் நாட்டில் குண்டு வீசியது மற்றும் துனீசிய நாட்டின் கிளர்ச்சி போன்ற போர்கள் நடந்ததன் போக்கில், ஏகாதிபத்தியவாதிகளின் தாக்குதல்களால், குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் நடத்திய தாக்குதல்களினால் கடந்த இருபது ஆண்டுகளில் பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ளிட்ட அப்பாவிக் குடிமக்களின் சாவு எண்ணிக்கை ஐந்து லட்சத்தையும் தாண்டிவிட்டதென ஒரு தோராய கணக்கீடு தெரிவிக்கின்றது. அவ்வாறு குறிவைக்கப்பட்டு பிளவு ஏற்படுத்தப்பட்ட நாடுகளின் பல பகுதிகள் உண்மையில் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுவிட்டன.

படையெடுத்து ஊடுருவும் அமெரிக்க இராணுவம் ஆரஞ்சு – பி (Orange-B) உள்ளிட்ட விஷவாயு மற்றும் கதிரியக்க வெடிமருந்து போன்ற அபாயகரமான ஆயுதங்களை கண்டபடி வான்வழி மூலம் வீசித்தாக்கும்போது அது மருத்துவமனைகள், அனாதையில்லங்கள், பள்ளிக்கூடங்கள் மற்றும் வழிபாட்டு ஸ்தலங்கள் என எதையும் விட்டுவைப்பதில்லை. அது போன்ற பேரழிவு ஆயுதத்தாக்குதலின் பின் விளைவாக, தங்களின் இல்லங்களையும் குடும்பத்தினரையும், சொத்துக்களையும் நெருங்கிய உறவினர்களையும்கூட இழந்த பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள், நம்பிக்கையற்று தங்களின் தாய்மண்ணை விட்டு பிற நாடுகளில் பாதுகாப்பைத் தேடி புலம்பெயர்ந்து தப்பியோடிக்கொண்டிருக்கின்றனர். ஒரு மேற்கத்திய பத்திரிகையாளர் விவரித்தபடி, நாவில் எச்சிலுடன் திரியும் ஓநாய் கூட்டத்தினால் நாம் சிறைபிடிக்கப்படப்போகிறோம் எனும் அச்சத்தில் வெள்ளாட்டு மந்தை இங்குமங்கும் ஓடுவதைபோன்று அவர்கள் அலைந்து கொண்டிருக்கின்றனர்.

மேற்காசிய நாடுகளில் எண்ணைக்கிணறுகளையும் இயற்கை வளங்களையும் அபகரித்திடுவதற்காகவும், தங்களது செல்வாக்கு மண்டலத்தை ஏற்படுத்துவதற்காகவும், தங்களின் இராணுவபல மகிமையை காட்டி அதன் மூலம் தங்களின் கடுங்கொடிய ஏகாதிபத்திய திட்டத்திற்கு பலம் சேர்க்கின்றவாறு ஒட்டுமொத்த பிராந்தியத்திலும் தங்களின் மேலாதிக்கத்தினை நிறுவிடுவதற்காகவும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் இதுவரையில் அந்த அளவிற்கு குற்றம் புரிந்துள்ளனர். ஆயினும் அவர்கள், தங்களின் நாடுதான் ‘மிகப்பெரிய ஜனநாயக நாடு’ என்று வெட்கமில்லாமல் பீற்றிக்கொண்டும், இவ்வுலகில் எவர் வாழ்ந்திட வேண்டும் மற்றும் எவர் மடிந்து அழிந்திடவேண்டும் என்பதை தீர்மானித்திடும் ஒட்டுமொத்த அதிகாரம் கொண்டவர்கள் நாங்களேயென அவர்கள் தங்களுக்குத்தானே திமிராகக் கூறிக்கொள்கின்றனர்.

பேரழிவு – மரணம் – தாய்மண்ணை விட்டு வெளியேற்றப்படுதல் மற்றும் துயரங்களை அனுபவித்தல் எனும் இந்த செயல்முறைப்போக்கில் மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் பல நாடுகள் உதாரணங்களாக இருக்கின்றன. இரண்டாம் உலகப் போரின் இறுதியில், நீண்ட நாட்களுக்கு முன்னரே, இஸ்ரேல் அரசை ஏகாதிபத்தியவாதிகள் ஏற்படுத்தி அங்கு யூதர்களின் ஆட்சியை நிறுவியபோது, பாலஸ்தீன மக்களுக்கு துயரமிகு, இக்கட்டானதோர் நிலைமை தோன்றியது. அது முதற்கொண்டு, உண்மையில் ஏகாதிபத்தியவாதிகளின் சதிவேலையால் அப்பகுதியிலுள்ள அனைத்து நாடுகளும் பாதிக்கப்பட்டு இப்பட்டியல் நீண்டுகொண்டே போய்க்கொண்டிருக்கின்றது. படுகொலைகளும் பேரழிவுகளும் நாளுக்கு நாள், மாதக்கணக்கில் வருடக்கணக்கில் ஏற்பட்டு நிலைமையை மோசமானதாகி கோரமாக ஆகிவிடும் போல் தோன்றுகின்றது. மேலும், இந்த செயல் போக்கில் சமீபத்திய சில பத்தாண்டுகளில் மிகவும் பாதிக்கப்பட்ட நாடுகளான ஈராக், லிபியா, சிரியா, ஏமன் மற்றும் இன்னும் பிற நாடுகளின் பெயர்கள் உலகில் பிரபலமடைந்துவிட்டன.

### மோசடியான குற்றச்சாட்டின் பேரில் ஈராக் கைப்பற்றப்பட்டது

புதிய ஆயிரமாவது ஆண்டு துவங்கிய கடந்த நூற்றாண்டின் எண்பதுகளில், அத்தகைய நாடுகளில் ஒன்றான ஈராக் இருமுறை ஏகாதிபத்திய தாக்குதல்களால் சின்னாபின்னாமாகியது. வழக்கம் போலவே பிற நாடுகளில் நடந்ததைப்போல, இந்நாட்டின் மீதான மிகவும் கேடுகெட்டதான அமெரிக்கா ஆக்கிரமிப்பிற்கு ஆதரவான, உலக அபிப்பிராயத்தை உருவாக்கிட அதற்கு ஆதரவான, நியாயப்படுத்துவதற்கான செய்திகளை வழங்கிடுவதில் அதன் அடிவருடி ஊடகங்கள் முக்கிய பங்காற்றியது.

ஈராக் மீதான இரண்டாவது தாக்குதலின் போது, அமெரிக்கா ஏகாதிபத்திய கொள்ளையர்கள் தங்களது நம்பிக்கைக்குரிய கூட்டாளியான, குறிப்பாக இங்கிலாந்தின் (United Kingdom) உதவியுடன் ஈராக் மீது படையெடுத்து மிகவும் அபாயகரமான படைக்கலங்கள் மற்றும் குண்டுகளைப் பிரயோகித்து இதயமற்ற ஈவிரக்கமற்ற வகையில் அந்நாட்டை சின்னாபின்னாமாக்கினர். அவர்கள் நாட்டிலேயேயுள்ள ஏஜண்டுகளின் உதவியுடன் பொய்யானதொரு விசாரணை நடத்தி, ரசாயன

தொடர்ச்சி 6ம் பக்கம்

## மத்தியக்கிழக்கு மற்றும் அதனைச் சுற்றியிருக்கும் நாடுகள்

# மேற்காசிய மனிதாபிமான நெருக்கடி குரூரமான ஏகாதிபத்திய திட்டத்தின் விளைவாகும்

5ம் பக்கத் தொடர்ச்சி

மற்றும் உயிரியல் பேரழிவு ஆயுதங்கள் வைத்திருந்து உபயோகித்தார் எனக் குற்றஞ்சாட்டி, ஒரு இறையாண்மை கொண்ட அந்நாட்டின் தலைவரான சதாம் ஹுசேனை கொடியதோர் அரசியல் வேட்டையாடி இறுதியில் கொலை செய்தனர். அதன் பின்னர், உலகத்தின் முன்பாக ஆதாரங்கள் காட்டப்பட்டு பேரழிவு ஆயுதங்கள் இருந்தது எனும் குற்றச்சாட்டு அப்பட்டமான பொய் என நிரூபிக்கப்பட்டது. முன்னாள் மனித உரிமை ஆணையத்தின் தலைவரும் மற்றும் ஈராக்கிற்கான ஒரு சிறப்பு பிரதிநிதியும் கூட, 'ஈராக் போர் சட்ட விரோதமானது' என்றும் எங்குமே காணப்படாத அத்தகைய 'பேரழிவு ஆயுதங்களை ஈராக் நாட்டிலிருந்து அகற்றிடுவோம்' எனும் நோக்கத்தில் அமெரிக்காவின் ஜார்ஜ் புஷ் நிர்வாகம் துவக்கியிருக்கும் ஊடுருவலானது சர்வதேச சட்டத்தை மீறிய ஒன்றென்பதை வேறு வழியின்றி தெளிவுபடுத்தினார்.

பிரிட்டனின் பிரதமர், ஜார்ஜ் புஷ்க்கு 2002ஆம் ஆண்டு ஜுலை மாதம் 28ஆம் தேதியன்று தனிப்பட்ட முறையில் எழுதிய கடிதமொன்றில், 'என்னவானாலும் உங்களுடனே இருக்கிறேன்' என்றார். அவர் பாராளுமன்றத்தில் பொய்யும் கூறினார். பின்னர் 2004ஆம் ஆண்டு, தனது நிலைபாட்டை மாற்றிக்கொண்டு, 'உண்மையில் பயன்படுத்தக்கூடிய ஆயுதங்கள்' இல்லையென்றாலும் சதாம் ஹுசேன் 'அதற்கான விருப்பத்தையும் தகுதியினையும் தக்கவைத்துக் கொண்டிருந்தார் எனக் கூற வேண்டியிருந்தது.

வேண்டுமென்றே பொய்யான மேற்கோள் காட்டப்பட்டு நடத்தப்பட்ட இப்போர், ஈராக் நாட்டிற்கு எதனைக் கொண்டு வந்து சேர்த்திருக்கின்றது? அமெரிக்க ஏகாதிபத்திய கொள்ளையர்கள் கண்டபடி அந்நாட்டின் மீது குண்டு வீசித்தாக்கி, அந்நாட்டின் மருத்துவ மனைகள், பள்ளிக்கூடங்கள், பாலங்கள் உள்ளிட்ட இன்னும் பிற உட்கட்டமைப்புகளை நிர்மூலமாக்கியதுடன், வயதானவர்கள், முடியாதவர்கள், குழந்தைகள் பெண்கள் உள்ளிட்ட 20 லட்சம் பேர்களை படுகொலை செய்தும் இன்னும் பலரை ஊனமாக்கியும் மற்றும் இன்னும் மோசமாக தாக்கிக்கொண்டிருக்கும் இச்செயலை ஊடுருவல்காரர்கள் 'தற்செயலான அழிவு' என பெயர் சூட்டிக்கொள்கின்றனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளால் தங்களின் கட்டுப்பாட்டில் அங்கு உருவாக்கப்பட்ட அரசாங்கங்கள் மக்களின் ஆதரவினை ஒருபோதும் பெற்றிட முடியாது; வெற்றியாளர்களான, அமெரிக்க படைவீரர்கள் விலைமதிப்பற்ற அருங்காட்சியகளையும் மாதிரிகளையும் மாபெரும் மெசபடோமிய நாகரிகத்தின் கலையம்சப் பொருட்களையும் போர் நினைவுப்பரிசாக மிகச்சுதந்திரமாகக் திருடிச் சென்றனர்; அமெரிக்க ஆட்சியாளர்கள் அந்நாட்டின் இயற்கை வளங்களையும் பிரதானமாக எண்ணை வளங்களையும் கொள்ளையிட்டனர். அவற்றை சிரமமின்றி செய்திட, அங்கு இராணுவத்தை நிரந்தரமாக அமர்த்திக்கொண்டனர்.

### மனிதாபிமானமற்ற மதவாத–தீவிரவாத அமைப்புக்களை அமெரிக்க ஏகாதிபத்தியம் பிறப்பித்திருக்கின்றது

அங்கு அவர்களது பிடியை உத்திரவாதப் படுத்திட, சியா மற்றும் சன்னி போன்ற மத மற்றும் இனப்பிரிவினரிடையே மத துவேசத்தையும் மதக்கலவரத்தையும் தூண்டிவிட்டு, இதுநாள் வரையில் பிரதானமாக, மதச்சார்பற்று இருந்துவந்த ஈராக்கி மக்கள் மத்தியில் பிரிவினைக்கான விதைகளை ஊன்றினர்; மதஅடிப்படைவாத சக்திகளை தூபமிட்டு வளர்த்ததன் போக்கில், மிக பயங்கரமான மத அடிப்படைவாத இஸ்லாமிய அரசு (ஐஎஸ்– முன்பு ஐஎஸ்ஐஎஸ் /ஐஎஸ்ஐஎல்) என்றதொரு அமைப்பு அதிலிருந்து உருவானது. இவ்வமைப்பானது இதனையொத்த மத அடிப்படைவாத சக்திகளான தலிபான், அல்–கொய்தா மற்றும் அல்–நஸ்ரா முன்னணி போன்ற அமைப்புகளிலிருந்தே தோன்றியது.

அரேபிய மொழியில் தேஷ் என்ற சுருக்கப்பெயரைக்கொண்ட இந்த ஐஎஸ் அமைப்பானது, வட ஈராக்கிலிருந்து முற்றிலுமாக இடம் பெயர்ந்து சிரியா நாட்டில் புகுந்து கொண்டு மத அடிப்படைவாத சித்தாந்த அடிப்படையிலான கடுமையான, எல்லைதாண்டிய புதியதோர் அரசு (காலிபேட்) நிறுவப்பட்டுவிட்டதென 2014ல் அறிவித்தது. 2014ல் சையத் என்ற ஜோர்டான் நாட்டின் ஐக்கிய நாடுகளுக்கான முன்னாள் தூதரும் மற்றும் ஜோர்டான் நாட்டு இளவரசரும் ஐஎஸ் அமைப்பின் ஆட்சியை ஒரு கடுமையான, அற்ப ஆசைகொண்ட, ரத்தக்களரி நிறைந்த ஆட்சியாகவும், அவர்கள் மத்தியிலிருக்கும் எந்த ஒரு 'த்க்பிரி' அல்லாதவர்களுக்கு எவ்வித ஆதரவோ அல்லது பாதுகாப்போ வழங்காத ஆட்சியாகவும் குணாம்சப்படுத்தினர்.

நைஜீரியா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், ஏமன், கென்யா, சோமாலியா, மாலி, லிபியா, சிரியா மற்றும் ஈராக் போன்ற நாடுகளில் காணப்படுவதைப் போல, த்க்பிரி எனும் எண்ணமானது அக்கம் பக்கத்திலிருப்பவர்களுடன் எவ்வித அன்பையும் பகிர்ந்துகொள்ளக்கூடாது என்பதாகும்; இதற்கு மாறாக சிந்திப்பவர்களை அழித்திடுவது என்ற மனப்போக்கினை அது அவர்களிடம் வளரச்செய்து விட்டது. எனவேதான், ஐஎஸ் அமைப்பினர் பத்திரிகையாளர்களையும் – விமர்சகர்களையும் சிரச்சேதம் செய்கின்றனர், அவர்கள் சந்தேகப்படும் நபர்களையும், மாறுபட்ட நம்பிக்கையை கொண்டிருப்பவர்களையும் மற்றும் குறிப்பாக பெண்களையும் குழந்தைகளையும் மனிதாபிமானமற்ற வகையில் துன்புறுத்துகின்றனர், பண்டைய நாகரிகத்தின் விலைமதிப்பற்ற நூற்றுக்கணக்கான ஸ்தலங்களை கண்மூடித்தனமாக அழிக்கின்றனர். (உதாரணம், ஈராக்கிலுள்ள நிம்ருத்தி அமைந்திருக்கும் ஆஸ்சிரியன் நகரம்) மேற்குறிப்பிட்ட யாவும் அவர்களின் 'பன்முகத்தன்மை' கொண்ட மிருகத்தனத்திற்கான ஒரு சில உதாரணங்களேயாகும்.

இருப்பினும், மத்திய கிழக்கின் பல நாடுகளில், தெற்காசியாவில், மேற்கு மற்றும் வடக்கு ஆப்பிரிக்காவில் மற்றும் பிற நாடுகளில் தனது இருப்பை விரிவுபடுத்தி இருக்கும் தற்போது மிகவும் ஆபத்தானதொரு மத அடிப்ப்டைவாத அமைப்பான இந்த ஐஎஸ் என்பது ஏகாதிபத்தியவாதிகளின் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஒரு செல்லப்பிள்ளையாகும். இந்த ஐஎஸ் அமைப்பு ஈராக்கில் 'எங்களது ஊடுருவலினால் வளர்ந்தது' என அமெரிக்க அதிபர் ஒபாமா ஊடகங்கள் முன்பாக இறுதியாக ஒப்புக் கொண்டார். ஒரு சிஎன்என் தொலைக்காட்சி ஊடகத்தில் அளித்த பேட்டியில், முன்னாள் பிரிட்டிஷ் பிரிமியர் டோனி பிளேர், 'ஈராக் போர் நடந்திராவிட்டால் இஸ்லாமிய அரசு என்பதே ஏற்பட்டிருக்காது' எனக் கூறினார். மரியாதைக்குரிய அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களது கூட்டாளிகளும் சிரியாவிலும்கூட நுழைந்துவிடக்கூடும்.

முழு மோசடித்தனமான மற்றும் புனையப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் ஈராக்கில் பேரழிவினை ஏற்படுத்தி, அதனைச் சின்னாபின்னாமாக்கி மற்றும் இரக்கமின்றி ரத்த ஆறு ஓடவிட்டு அந்நாட்டையும் அதன் மக்களையும் வேதனைக்குள்ளாக்கி விட்டனர். இவ்வாறாக, மேலாதிக்கம் செலுத்துவதற்காகவும் மற்றும் லாப வேட்டைக்குமான தணியாத பேராசைகொண்ட ஒரு வஞ்சகமான, கொடிய, போர்வெறி பிடித்த ஒன்றாகத்தான் அமெரிக்க ஏகாதிபத்தியம் மனித இன வரலாற்றில் இடம்பிடித்துள்ளது.

### லிபிய நாட்டின் மீதான கிரிமினல்தனமான ஆக்கிரமிப்பு

ஈராக் மீதான அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஊடுருவலானது மோசடியான, கொடுமையான, மற்றும் பேராசை பிடித்த ஒன்று என்றால், அவர்களின் சொந்த ஊடகமான நியூ யார்க் டைம்ஸ் 2016ல் பிப்ரவரி மாதம் 28–29 தேதிகளில் அவர்களது 'லிபியா சூதாட்டத்தை' உருவகப்படுத்தி குறிப்பிட்டிருப்பதுபோல், அது இராணுவவாதம் மற்றும் ஆக்கிரமிப்புத்தன்மையுடன் பிரிக்கமுடியாத அமெரிக்க கொள்கையின் திமிர்த்தனத்திற்கும் பொறுப்பற்ற தன்மைக்குமான இன்னுமொரு உதாரணம் ஆகும்.

முகம்மது கடாபியின் தலைமையிலான லிபிய அரசாங்கம் தீவிர அமெரிக்க எதிர்ப்பு நிலைபாட்டினை எடுத்த காரணத்தினால் அந்த அரசாங்கத்தை அகற்றிவிட்டு அவ்விடத்தில் ஒரு பொம்மை ஆட்சியை நிறுவும் நோக்கில் அமெரிக்க கொள்ளையர்களாலும் மற்றும் நேட்டோ அமைப்பிலிருக்கும் அதன் உடந்தையாளர்களாலும் தொடுக்கப்பட்டதே லிபியா போராகும். இவையனைத்தும் அந்நாட்டின் மிகுந்திருக்கும் எண்ணைவள இருப்பை கொள்ளையிடும் ஏகாதிபத்திய பேராசையை தீர்த்துவைக்கும் போக்கில் நடைபெறுவதாகும்.

கடாபி தலைமையிலான லிபியா நாடானது வெறும் ஆறு கோடி மக்கட்தொகை கொண்ட, இனவாதப் பிளவு இல்லாத பெருமளவு எண்ணைவளம் கொண்ட ஆப்பிரிக்க கண்டத்தின் வளர்ச்சியடைந்த ஒரு முன்னணி நாடாகும். எனவே, ஆப்பிரிக்காவின் மிகப்பெரும் எண்ணைவளத்தை கட்டுக்குள் கொண்டுவந்து பேரம் பேசிடுவதற்காக, அமெரிக்க கட்டுப்பாட்டில் இயங்கக்கூடிய ஒரு பொம்மை அரசாங்கத்தை நுழைப்பதற்காகவே கடாபி ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டார்.

லிபியா மீது அமெரிக்க–நேட்டோ கூட்டானது நடத்திய போர், ஒரு அமைதியான தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்காக முன்மொழியப்பட்ட அனைத்தையும் போர்வெறி கொண்ட அமெரிக்க ஆட்சியாளர்கள் முன்னதாக உதாசீனப்படுத்திவிட்டதால் ஏற்பட்ட, வீணாகப் புனையப்பட்ட, ஒரு அப்பட்டமான கிரிமினல்தனமான ஆக்கிரமிப்புப் போர் ஆகும்; மாறாக, அல்–கொய்தா, ஐஎஸ்ஐஎஸ் அல்லது போகோ ஹரம் ஆகியவற்றுடன் நேரடி தொடர்பு கொண்டிருக்கும் முத்திரை குத்தப்பட்ட இஸ்லாமிய மத அடிப்படைவாத குழுக்களுக்கு சற்றும் குறைவில்லாத கிளர்ச்சிப் போராட்டக்காரர்கள் என்றழைக்கப்படுவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன. 2011ஆம் ஆண்டு அக்டோபரில் இறையான்மை கொண்ட அந்நாட்டின் அதிபர் முகம்மது கடாபியும், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர்தான் அமெரிக்க அரசுத்துறையால் அன்புடன் வரவேற்கப்பட்ட அவரது மகனும் அமெரிக்க ஆதரவு மத அடிப்படைவாத கொலைகாரக் கும்பலால் மூர்க்கத்தனமாக கொலைசெய்யப்பட்டனர். அவர்கள் கொலை செய்யப்படுவதை ஒரு காணொலியில் பார்த்த அப்போதைய அமெரிக்க அரசுச் செயலர் ஹிலாரி கிளிண்டன் அவர்கள் அதனை, "நாங்கள் வந்திருந்தோம், நாங்கள் பார்த்தோம், அவர் இறந்துவிட்டார்" என மகிழ்ச்சியுடன் அதனை வரவேற்றார். மேலும், லிபிய அரசாங்க ஆயுதக்கிடங்குகளிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுடன் லிபிய இஸ்லாமியக் கிளர்ச்சியாளர்கள் சிரியாவினுள் அனுப்பப்பட்டு சிஐஏவின் மேற்பார்வையின் கீழ் பெங்காழி எனுமிடத்திலும் மற்றும் தெற்கு துருக்கியில் ஓரிடத்திலும் ரகசிய நிலையங்கள் நிறுவப்பட்டன.

சர்வதேச விதிகள், அரசியலமைப்பு மற்றும் அமெரிக்க சட்ட விதிகள் ஆகிய அனைத்தையும் அப்பட்டமாக மீறிய இந்த நடவடிக்கையானது ஒரு காலத்தில் செழிப்பாயிருந்த அந்நாட்டை வன்முறையின் உலைக்களமாக, நிலையற்றதாக, கலவர பூமியாக மாற்றி போரில் ஈடுபடாத பல்லாயிரக்கணக்கான ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயதானவர்கள் மற்றும் முடியாதவர்களை சொல்லவொணா துயரங்களுக்கு ஆளாக்கிவிட்டது. இப்போருக்குப்பின்பு, மத்தியப்படுத்தப்பட்ட கட்டுப்பாடு என ஏதுமில்லாத ஒரு நாடாக மாறி, பல்வேறு கிளர்ச்சியாளர்கள் அவரவர் கட்டுக்குள் கொண்டுவர தெருக்களில் தங்களுக்குள் போட்டியிட்டுக்கொண்டு கையில் ஆயுதங்களுடன் திரிந்து கொண்டிருக்கின்றனர். கிட்டத்தட்ட அந்நாட்டின் மூன்றில் ஒரு பங்கு மக்கட் தொகையினர் புகலிடம் தேடி எல்லையைத்தாண்டி கடந்து துனீசியா நாட்டுக்கு தப்பித்துச் சென்றிருக்கின்றனர். ஐரோப்பாவிற்கு தப்பிச்சென்ற மற்றவர்கள் அங்கு சென்றடைந்தவுடன் வெறுத்தொதுக்கப்பட்டும் சித்திரவதை முகாம்களில் சிறைவாசம் அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர். (குளோபல் ரிசர்ச் 04.08.2016) 2012 செப்டம்பரில் பெங்காழி என்ற இடத்திலுள்ள அமெரிக்காவின் உதவி மையம் தாக்கப்பட்டு அமெரிக்க தூதுவரும் மற்றும் மூன்று பாதுகாவலர்களும் கொல்லப்படுமளவிற்கு அங்கே சூழ்நிலைமை சென்றுவிட்டது.

லிபிய போரானது அமெரிக்கா–நேட்டோ நடத்திய லிபியா போராக அடையாளம் காணப்பட்டாலும்,

தொடர்ச்சி 7ம் பக்கம்

## மத்தியக்கிழக்கு மற்றும் அதனைச் சுற்றியிருக்கும் நாடுகள்

# அதிகார வெறியும் இலாபப்பசியும் கொண்ட ஏகாதிபத்தியம், பொய்யிலும் இறுமாப்பிலும் மனிதத்தன்மையற்ற தாக்குதலிலும் ஈடுபடுகின்றது

6ம் பக்கத் தொடர்ச்சி

'அமெரிக்க ஆட்சியாளர்கள் மற்றும் அதன் ஒட்டுமொத்த அரசியல் அமைப்புமுறையின் தரம் தாழ்ந்த குணாம்சத்தின் ஒரு முழுமையான வெளிப்பாடாக' மனித சரித்திரத்தில் அது நிலைத்து நின்றுவிட்டது. (வேர்ல்டு சோசலிஸ்ட் வெப்சைட்)

அமெரிக்க ஆட்சியாளர்கள் தாங்கள் வெளிப்படையாக விரும்பியவாறு ஈராக்கை ஆக்கிரமிக்க முடிந்திருக்கின்றது, லிபியாவை பேரழிவுக்குள்ளாக்கிட முடிந்திருக்கின்றது. ஆனால், அவர்களுக்கு எதிராகவும் அவர்களின் கொள்கைகளுக்கு எதிராகவும் வேகமாக எழுந்துவரும் அவர்களது நாடு உள்ளிட்ட உலக மக்களின் கருத்தை தடுத்த நிறுத்திட முடியவில்லை. அதனால், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் சிரியாவில் வேறு பிற வழிகளில் புதிதாக முயற்சி எடுத்துவிட்டனர்.

### கொடூர சதிச்செயல் மூலம் சிரியாவில் பொம்மை ஆட்சியை நிறுவிட ஏற்பாடு

அமெரிக்க ஏகாதிபத்தியம், அதன் கூட்டாளிகள், அதன் அடிவருடிகள், இஸ்ரேல் மற்றும் சவுதி அரேபியா, ஜோர்டான், கத்தார் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட் போன்ற நாடுகளின் மன்னர்கள் சிரியாவில் "ஆட்சி மாற்றம்" வேண்டுமென, அதாவது அந்நாட்டின் அதிபர் பசார்–அல்–ஆசாத்–ஐ ஆட்சியிலிருந்து அகற்றிட வேண்டுமென விரும்பினார்கள். வெளிப்படையான இத்திட்டத்துடன் அவர்கள், ஆசாத்திற்கு எதிரான கிளர்ச்சிக் குழுக்களையும் மற்றும் சுதந்திர சிரியப் படை (Free Syrian Army) என்று அழைக்கப்படும் குழுக்களையும் ஆதரித்து, நிதியளித்து, ஆயுதங்களை தந்து பயிற்சியளித்தனர். அதிபர் ஆசாத் சர்வாதிகார, ஜனநாயகமற்ற ஆட்சியை நடத்தி வந்தாலும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அமெரிக்காவின் திட்டத்திற்கு எதிரான மக்களின் ஆதரவை திரட்டிட முடிந்ததால், இத்தகைய சக்திகளால் அவர்கள் எஜமானர்கள் எதிர்பார்த்த இலக்கினை அடைவதற்கு ஒருபோதும் முடியவில்லை. கிளர்ச்சியாளர்கள் உள்நாட்டில் கலவரத்தையும் சச்சரவுகளையும் ஏற்படுத்தி, அதன் மூலம் மத அடிப்படைவாதிகள் தலைதூக்கிட ஏதுவான களத்தை மட்டுமே தயார்படுத்திட முடிந்தது. இத்தகைய சூழ்நிலைமையில் ஐஎஸ் தீவிரவாதிகள் சிரியாவினுள் சுலபமாக உட்புகுந்திட முடிந்தது.

ஐஎஸ் அமைப்பானது ஆஸாத்திற்கு எதிரானதால் அதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் அனைத்துவகை ஆசீர்வாதங்களும் பொருளுதவிகளும் கிடைத்தன. அம்னெஸ்டி இன்டர்நேஷனல் (Amnesty International) அமைப்பின் கூற்றுப்படி, அமெரிக்கா மற்றும் அதன் கூட்டு நாடுகளின் ஆதரவு பெற்ற ஐஎஸ் அமைப்பும், சிரியா கிளர்ச்சிப்படை குழுக்களும் ஆட்களைக் கடத்துதல், துன்புறுத்துதல் மற்றும் கேள்வி கேட்பாடின்றி கொலை செய்தல் உள்ளிட்ட சர்வதேச மனிதாபிமான சட்டங்களை கடுமையாக மீறி குற்றமிழைத்திருக்கின்றனர். கிளர்ச்சிப்படைக் குழுக்கள் சிறுபான்மை இன மதப்பிரிவினரை குறிவைத்துத் தாக்கினார்கள் எனவும் அம்னெஸ்டி இன்டர்நேஷனல் அமைப்பின் அறிக்கை காட்டுகின்றது. போர்க்குற்றங்கள், பிற தீவிர மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை மீறியதாக குற்றஞ்சாட்டப்பட்ட ஆயுதம் தாங்கிய குழுக்களுக்கு போர்க்கலை மற்றும் நிதி ஆதரவு உட்பட ஆயுதங்கள், போர்த்தளவாடங்கள் மற்றும் பிற இராணுவ உபகரணங்கள் பறிமாற்றப்படுவதையும் உடனடியாக விட்டுவிட வேண்டும் என சர்வதேச சிரிய கிளர்ச்சி ஆதரவு குழுவான அமெரிக்கா, சவுத் அரேபியா, கத்தார், துருக்கி, ஐக்கியப் பேரரசு (United Kingdom) மற்றும் பிரான்ஸ்– ஆகிய நாடுகளை அவ்வமைப்பு மேலும் கேட்டுக்கொண்டது.

மற்றொருபுறம், தற்போது ரஷ்யப் படைகள் அளித்துள்ள வான் எல்லைப் பாதுகாப்புடன், சிரியா அரசாங்கத்தின் படைகள் ஐஎஸ் மற்றும் கிளர்ச்சியாளர்கள் கைவசமிருக்கும் நாட்டின் பிற பகுதிகள் மீது கடுமையான தாக்குதலை தொடுத்துக் கொண்டிருக்கின்றன. இத்தகைய தாக்குதலால் ஐஎஸ்ஸூம் மற்றும் அமெரிக்க ஆதரவு கிளர்ச்சிப் படையினரும்கூட தாங்கள் கைப்பற்றியிருந்த எல்லைகளை இழந்துகொண்டு வருவதால், அவற்றை தடுத்திட வேண்டி, மனித உரிமைகள் மீறப்படுவதாக காரணம் காட்டி அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் கூட்டாளிகளும் பரபரப்பாக முயன்றுகொண்டிருக்கின்றனர். இவ்வாறாக, அந்நாடானது எண்ணை வளம் மிக்கதாகவும் போர் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகவும் இடம்பெற்றிருகின்ற காரணத்தால், அந்நாட்டின் மீது தங்களின் மேலாதிக்கத்தை உறுதிசெய்துகொள்ள வேண்டி, அமெரிக்காவும் ரஷ்யாவும் எதிரெதிரான பூசல் கொண்டிருப்பதையும் சில சமயம் மூர்க்கத்தனமாக சண்டையிட்டுக் கொண்டிருப்பதையும் இப்போது உலகம் கண்ணுற்றுக்கொண்டிருக்கின்றது.

இதன் விளைவாக, கடுமையான மற்றும் நீடித்த அப்போரானது, ஆயிரக்கணக்கில் சிரிய மக்களை (சில அறிக்கை 3,00,000 பேர்கள் என்றும், மற்றும் சில அறிக்கைகள் கிட்டத்தட்ட 10 லட்சம் பேர் என்றும் கூறுகின்றது) கொன்று குவித்தும், பல லட்சம் பேரை அவர்களின் வாழ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தியும் இருக்கிறது. உண்மையில் ஏகாதிபத்தியவாதிகளின் திட்டமிட்ட போருக்குப் பலியாகி, சிரியா மற்றும் ஈராக்கிலிருந்து தப்பித்து வெளியேறும் அகதிகளுக்கு படகுகளின் மூலம் மத்தியத் தரைக்கடலை தாண்டிச் செல்லும் ஆபத்து நிறைந்த முயற்சியை எடுப்பதைத்தவிர வேறுவழி ஏதும் காணப்படவில்லை.

உண்மையில், நிராதரவற்ற, எண்ணற்ற மனித உயிர்களைக்கொண்ட அப்பாவி மக்கள்தான் என்றுமில்லாத அளவிற்கு ஐரோப்பாவில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள புலம் பெயர்ந்தவர்கள் பிரச்சினை உருவாவதற்கு காரணமென ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் அடிவருடி ஊடகங்களும் அடைமொழியிட்டுக்கூறுகின்றனர். இதில் சம்மந்தப்பட்ட நாடுகளான ஈராக்கும் சிரியாவும் பொறுப்பேற்றிட வேண்டும் என்று கூறி, தங்களின் வெட்கக்கேடான செயல்களை மூடிமறைத்து, மக்களை நம்பவைத்திட அவர்கள் தங்களைத்தானே இரக்க மனம் கொண்ட ரட்சகர்களாக காட்டிக்கொண்டிருக்கின்றனர். என்னவொரு வெட்கக்கேடான, உண்மைக்கு புறம்பான, புனையப்பட்ட கூற்று!

### சிரியாவைப்பற்றி இன்னும் ஓரிரு வார்த்தைகள்

அமெரிக்கா, சிஐஏ, ஏகாதிபத்திய பினாமிகள் மற்றும் கூட்டாளிகள் என்றழைக்கப்படுபவர்கள் தலைமையில், ஈராக் மீது தொடுக்கப்பட்ட போர் உண்மையில் தற்போதைய காலகட்ட ஏகாதிபத்தியவாதிகளின் கடற்கொள்ளை போராகவே வரையறுக்கப்படுகின்றது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான ஏகாதிபத்திய சக்திகள் ஒரு ரகசிய சைகஸ்– பைகாட் ரகசிய ஒப்பந்தத்தின் (Sykes-Picot 2.0) அடிப்படையில், மத்தியக்கிழக்கு நாடுகளையும் வட ஆப்பிரிக்க நாடுகளையும் வரைபடத்திலிருந்து மாற்றியமைத்திட துவங்கியது என்பதை குறிப்பிடுவது அவசியமாகும். (ஆரம்பத்திலிருந்த சைகஸ்– பைகாட் ஒப்பந்தம் எனப்படுவது 1916ல் கிரேட் பிரிட்டனுக்கும் பிரான்ஸ் நாட்டுக்குமிடையே போடப்பட்ட ஒப்பந்தமாகும். இதில் ஜார் மன்னர் தலைமையிலான ரஷ்ய பேரரசும் அந்த ஒப்பந்தத்திற்கு இசைவு தந்திருக்கின்றது. அந்த ஒப்பந்தம் தென் மேற்கு ஆசியாவில் அவ்விரு நாடுகளும் தத்தம் செல்வாக்கு மண்டலத்தையும் கட்டுப்பாட்டையும் எவ்வாறு பரஸ்பரம் பகிர்ந்து கொள்வது என்பதற்காக போடப்பட்டதாகும்)

அந்த ஒப்பந்தத்தின் நோக்கமானது, சுதந்திர அரசுகளை நிலைகுலையச்செய்வதும் மற்றும் சுதந்திரம் அடைவதற்கான அறிகுறிகள் தென்பட்டால் அத்தகைய சக்திகளை தடுத்து நிறுத்துவதுமாகும். மேலும், ஈராக்கை அழித்தொழிக்கவில்லையென்றால், ஆப்கானிஸ்தானை தொடர்ந்து ஆக்கிரமித்துக் கொண்டிருக்கவில்லையென்றால் மற்றும் லிபியாவை முற்றிலுமாக நிர்மூலமாக்கவில்லையென்றால் சிரியாவிற்கு எதிரான போரைத் தொடுத்திருக்க முடியாது. சிரியாவிலிருந்த பிற்போக்குவாத தற்கொலைப்படையானது அவர்களுக்கு பணிந்து போகாத குர்து இனத்தவர், கிருஸ்துவர்கள், த்ரூசே இனத்தவர், சியா மற்றும் சன்னி பிரிவினரை இனப்படுகொலை செய்துகொண்டிருக்கின்றது.

சிரியா மற்றும் துருக்கியில் ஏற்படுத்தப்பட்ட அமெரிக்க விரிவாக்கம், நேட்டோவின் மத்தியக்கிழக்கு ஆயுதத்தளம் ஆகியனகூட சிரியாவிற்கு எதிரான போரில் பெரும் பங்காற்றிக்கொண்டிருக்கின்றன. சிரியா மற்றும் ஈராக்கில் அதன் ஏகாதிபத்திய அபிலாசைகளை முன்னெடுத்துச்சென்றுகொண்டிருக்கும் அதே நேரத்தில்,அதன் தெருக்களிலேயே ரத்த ஆறு ஓடவிட்டு துருக்கியை நிலைகுலையச் செய்திருக்கின்றது. போருக்கான சாத்தியத்தை அதிகப்படுத்தி, சிரியாவில் நேட்டோவின் பங்கினை விரிவுபடுத்துவதற்காக துருக்கி பயன்படுத்தப்படும் என்பது கிட்டத்தட்ட நிச்சயமான ஒன்றாகிவிட்டது.

### ஏழை ஏமன் மக்கள் மீதான கட்டுமிராண்டித்தனமான தாக்குதல்

மத்தியக்கிழக்கு நாடுகளிலேயே மிகவும் வறுமையிலிருக்கும் நாடான, செங்கடலின் கரையோரத்தில் அமைந்திருக்கும் நாடான ஏமன் மீது பேரழிவு மற்றும் மரணத்திற்கான காட்சி அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இங்கே, அமெரிக்க முத்திரை கொண்ட ஆட்சி மாற்ற நாடகம் பின்னோக்கிய முறையில் வெளிப்பட்டிருக்கின்றது.

2014ஆம் ஆண்டின் பிற்பகுதியில், ஏமன் மக்களால் தற்போதைய அதிபர் ரப்பு மன்சூர் ஹாடி நாட்டை விட்டு விரட்டியடிக்கப்பட்டார். சிறிதளவேயான ஒரு ஆதரவு அடித்தளத்தை கொண்டிருந்தாலும், அமெரிக்க கூட்டாளிகளுக்கும், ஏன் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும்கூட, ஒரு நம்பிக்கைக்குரிய நாடான சவுதி அரேபியாவின் பின்புலத்தோடும் ஆசீர்வாதத்தோடும் அவர் மீண்டும் ஆட்சியில் அமர்த்தப்பட்டார். சவுதி மன்னர் மேற்கொண்ட நாசவேலை மற்றும் அமெரிக்க அரசுத் துறையின் மறைமுக ஆதரவு ஐக்கிய நாட்டு சபையின் சமாதான முன்மொழிவுகளையும்கூட ஒதுக்கிவைத்திடும் துணிச்சலை அவருக்குத் தந்தது.

அதிபர் ஹாடியின் கட்டுப்பாட்டை ஏமனில் மீட்டெடுத்து உறுதியாக நிறுவுவதற்காகவும் மற்றும் ரியாத் மற்றும் அமெரிக்க கூட்டாளிகளின் பொருளாதார மற்றும் அரசியல் நலன்களை உத்திரவாதப்படுத்துவதற்குமான ஒரு துணிச்சலான முயற்சியில் சவுதி தலைமையிலான கூட்டணியானது முன்னாள் அதிபர் அலிஅப்துல்லாசாலெ உள்ளிட்ட ஹவுதிஸ் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் என்றழைக்கப்படும் சியா கிளர்ச்சியாளர்களுக் கெதிராக மார்ச் 2015லிருந்து வான்வெளித் தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கின்றது. அதன் வழிகாட்டியும் எஜமானனுமான அமெரிக்க ஏகாதிபத்தியம் படைக்கலை ஆதரவினையும் மற்றும் பிற வசதிகளுடன் சாதகமான சூழ்நிலைமையை ஆக்கிரமிப்பாளர்களுக்கு மீண்டும் மீண்டும் ஏற்படுத்தி வழங்கிக் கொண்டு இருக்கின்றது. அவைகள் மூலம் செறிவூட்டப்பட்டு, தைரியத்துடன், சவுதி மற்றும் அதன் ஆக்கிரமிப்பு கூட்டாளிகள் அந்த ஏழை நாட்டின் மின் நிலையங்களையும் நீர்வழித்தடங்களையும், அதன் மருத்துவ வசதிகளையும் மற்றும் பிற கேந்திரமான மக்களுக்கான உட்கட்டமைப்புகளையும் வேண்டுமென்றே அழித்தொழித்தனர். அது மிகப்பெரும் படுகொலை மற்றும் பேரழிவு ஏற்படக் காரணமாக இருந்ததுடன் நச்சுத்தன்மை கொண்ட காலரா பரவுவதற்கும்கூட இட்டுச்சென்றது.

அக்டோபர் 2016 துவக்கத்தில் நிகழ்ந்த ஒரு சமீபத்திய கண்டனத்துக்குரிய செயலில், 500 பவுண்டு எடையுள்ள கதிர்வீச்சில் இயங்கும் அமெரிக்க தயாரிப்பு குண்டு ஒன்றை, ஒரு துக்க ஊர்வல பேரணி மீது அமெரிக்க ஆதரவு சவுதி தலைமையிலான கூட்டணியானது வீசித்தாக்கியது. அந்த குண்டுவீச்சினால் தாங்கள் நேசித்த அன்பிற்குரியவர்களுக்காக ஏற்கனவே அவர்கள் துக்கம் அனுஷ்டித்துக் கொண்டிருக்கையில், பெரும்பாலும் சாதாரண குடிமக்கள் 140க்கும் அதிகமாக கொன்று குவிக்கப்பட்டு மற்றும் 525க்கும் அதிகமான பொதுமக்கள் காயப்படுத்தப்பட்டனர். இச்சம்பவமானது மனித உரிமை கண்காணிப்பு குழுவால் 'ஓர் அப்பட்டமான போர்க்குற்றம்' என அழைக்கப்பட்டது. (கார்டியன் – 15.10.2016)

அதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் சோவியத் சகாப்தகால கிடங்குகளிலிருந்து ஏவுகணைகளை ஏவினர். அவைகள் எவருக்கும் தீங்கிழைக்காமல் கடலில் வீழ்ந்தது. இதற்கு பதில் தாக்குதலாக, செங்கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அமெரிக்க கடற்படை ஹவுதி–கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டு எல்லையில் இருந்த ரேடார்

தொடர்ச்சி 8ம் பக்கம்

## மத்தியக்கிழக்கு மற்றும் அதனைச் சுற்றியிருக்கும் நாடுகள்

# யு எஸ் ஆட்சியாளர்களின் கொள்கைகளை உலக மக்கள் மட்டுமல்ல, அமெரிக்க மக்களும் எதிர்க்கின்றனர்

7ம் பக்கத் தொடர்ச்சி

ஸ்தலங்களை அழிப்பதற்காக, சில ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள தங்கள் இடத்தில் இருந்து கொண்டு நீண்ட தூரம் பாயும் ஏவுகணைகளை அவர்களின் நீர்மூழ்கிப் படகுகளிலிருந்து ஏவினர். பென்டகனின் செய்தி செயலாளர் ஒருவர் இச்செயலை, "...குறைந்த பட்ச தற்காப்புத் தாக்குதல்... எங்களின் ஆட்களையும், எங்களது போர்க்கப்பல்களையும் மற்றும் இந்த முக்கிய கடல்வழி தடத்தில் சுதந்திரமாக பயணத்தையும் பாதுகாத்திட ..." என்று நியாயப்படுத்தினார். குற்றம் புரிந்துகொண்டிருக்கும் ரௌடியின் வெட்கமற்ற வாக்குமூலம்!

### அமெரிக்க மக்கள் தங்கள் சொந்த நாட்டின் போர்க் கொள்கைகள் குறித்து தீவிரமாக கேள்வியெழுப்பிக்கொண்டிருக்கின்றனர்

அமெரிக்கா திட்டமிட்டு நடத்தி உருவாக்கிய கொந்தளிப்பான சுழலில் வீழ்ந்திருக்கும் மத்தியக் கிழக்கு மற்றும் அதனைச்சுற்றியுள்ள நாடுகளின் வரிசையில் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், லெபனான், எகிப்து, ஈரான் போன்ற இன்னும் பிறநாடுகளின் பெயர்களும் இருக்கின்றன. அவைகள் ஆப்கான் நாட்டைப்போல அமெரிக்காவின் இரக்கமற்ற ஆக்கிரமிப்புக்கு பலியாகிவிட்டன, அல்லது அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் உருவாக்கி வளர்த்துவிட்ட மத அடிப்படைவாத செயல்பாடுகளுக்கு இரையாகி வீழ்ந்துவிட்டன. அது சவுதியில் உருவாகிய அல்–கொய்தா அல்லது ஆப்கானில் உருவாகிய தலிபான்களாகவும் அல்லது சமீபத்திய ஐஎஸ் –ஆகவும் இருக்கலாம்.

அமெரிக்க தலையீடும்–ஆக்கிரமிப்பும் எத்தகைய பரிமாணத்திற்கு சென்றடைந்துள்ளது என்றால், ஒரு காலத்தில் ஈராக்கின் பரம விரோதியாயிருந்த ஈரானின் முன்னணித் தலைவர் ஒருவர், "ஈராக்கின் உள்விவகாரங்களில் அமெரிக்காவும் மற்றும் பிறரும் தலையிடுவதை கடுமையாக எதிர்க்கின்றோம்... அமெரிக்காவின் நோக்கம் குருட்டுத்தனமாக பின்பற்றும் தனது சொந்த ஆட்களை ஆட்சியிலமர்த்திடுவதாகும்" என்று குறிப்பிடுமளவிற்கு சென்றுள்ளது.

ஏகபோகவாதிகள்–ஏகாதிபத்தியவாதிகள் கட்டுப்பாட்டில் இருக்கும் ஊடகங்கள், கிடைக்கின்ற அனைத்து வழிமுறைகளை கடைபிடித்து நிலைமையை அழகாகக் காட்டினாலும், போர்வெறி ஆக்கிரமிப்பாளர்களை ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் காப்பாற்றிட வந்தவர்களென வருணித்தாலும், அவர்கள் இலக்கு நாடுகளின் ஏதாவது ஒரு ஆட்சியாளர்களைக்கொண்டு அவைகளை மீறிக்கொண்டுதானிருக்கின்றனர். ஆனால், கண்காணிக்கப்பட்ட, தணிக்கை செய்யப்பட்ட மற்றும் பொய்யாகக் கூறப்பட்ட அறிக்கைகள் மூலம்கூட, உண்மைகள் வெளிவந்துவிட்டன, தொடர்ந்து நிலையாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

பேரழிவு ஆயுதங்களை வைத்திருந்தது பயன்படுத்தியது என்ற ஈராக் –க்கு எதிரான குற்றச்சாட்டு அப்பட்டமான பொய் என்பதும், கடாபியை கொலை செய்ததும், லிபியாவை சீரழித்து சிதைத்தது கிரிமினல்தனமானது என்பதும், சிரியாவில் பொம்மை அரசை நிறுவிட வேண்டுமென்றே முயற்சி செய்தது என்பதும், மத்தியக் கிழக்கில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு இறுதியில் இருந்த எதிர்ப்பினை களைந்திடுவதற்குமேயன்றி வேறெதற்குமல்ல என்பதும் கிடைக்கப்பெற்ற மறுக்க முடியாத சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் வாயிலாகப் பார்க்கையில், குறைந்தபட்ச அறிவுடைய எவருக்கும் தெளிவாகத்தெரிந்த ஒன்றாகும்.

அமெரிக்க மக்களும்கூட கேள்வியெழுப்பிக் கொண்டிருக்கின்றனர். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் வியட்நாம் போரின்போது எழுப்பிய கேள்விகளைவிட அவர்கள் மென்மேலும் துல்லியமாக கேள்வியெழுப்பிக் கொண்டிருக்கின்றனர். வால் ஸ்ட்ரீட்ஐ கைப்பற்றுங்கள் என்ற போராட்டத்தில் தங்களின் சொந்த நாட்டுக்கெதிராக வெளிப்படுத்திய எதிர்ப்புகள் போன்று மட்டுமல்லாது, அவர்கள் போருக்கெதிராகவும், சமாதானத்தை வேண்டியும், மிகப்பெரும் பேரணிகளை நடத்திக் கொண்டிருக்கின்றனர். ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள மத்தியக்கிழக்கு மற்றும் ஆப்பிரிக்கா நாட்டின் பாலைவனங்களில் அமெரிக்கர்கள் எதற்காக உயிரை விட்டுக்கொண்டிருக்கின்றனர் என அவர்கள் கேள்வியெழுப்புகின்றனர். வேலையின்மை, இருப்பிடம் இல்லாமை, அதிகரித்துக்கொண்டிருக்கும் வறுமை ஆகியவற்றுடன் முதலாளித்துவமானது அவர்களை தங்களின் சொந்த மண்ணிலேயே ஒட்ட உறிஞ்சி வருவதால், அவர்களின் சொந்த நலனுக்கு அல்லாத, நாட்டிற்கு வெளியே வெகுதூரத்தில் நடக்கும் போர்களுக்காக ஏற்படும் மிகப்பெரும் நிதி இழப்பினைப்பற்றி அமெரிக்க மக்கள் கேள்வியெழுப்பிக்கொண்டிருக்கின்றனர்.

இஸ்லாமிய அரசுக்காக போராடும் குழுக்களை, அல்லது சிரியாவில் அல்–கொய்தாவை, அமெரிக்காவானது உண்மையில் எதிர்க்கின்றதா என்ற கேள்வியும்கூட வந்துகொண்டிருக்கின்றது. இல்லையெனில், 15 ஆண்டுகளுக்கும் மேலாக தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கின்றோம் எனவும் அது தீவிரவாதத்திற்கெதிரான போர் எனவும் கூறிக்கொண்டிருந்தாலும், அந்த தீவிரவாதம் ஆயிரம் மடங்கு பலம் பெற்றிருப்பதும், ஆயிரம் மடங்கு மூர்க்கத்தனமாக ஆகியிருப்பதும் எப்படி? ஏகாதிபத்திய சக்திகளின் நேரடி பினாமிகளே இந்த பிற்போக்குவாத தீவரவாதக் குழுக்கள் என்பது கிடைக்கப்பெற்ற உண்மைகள் மற்றும் புறவயப்பட்ட பகுப்பாய்வுடன் ஒத்துப்போகின்றது. ஏகாதிபத்தியவாதிகள் சீரான முறையில் தங்களின் பினாமிகளுக்கு பொருளாதாரம் மற்றும் ஒட்டுமொத்த பிராந்தியத்திலும் இருக்கும் தங்களின் நோக்கம் ஆகியவற்றை தொடர்ச்சியாக பகிர்ந்து கொள்கின்றனர்.

### ஆட்சியதிகாரம் மற்றும் லாப–வேட்கை கொண்ட ஏகாதிபத்திய சுறாக்கள் மனித ரத்தத்தில் உயிர்வாழ்ந்துகொண்டும் போரின் மூலம் பிழைத்துக்கொண்டுமிருக்கின்றன

இதுபோன்ற சூழ்நிலைமையில் தற்போதிருக்கும் உண்மையை கண்டறிவதற்கு, நாம் உண்மைகள் சிலவற்றை நினைவுபடுத்திப் பார்ப்பதும் ஊன்றிப் பார்ப்பதும் தேவைப்படுகிறது. இதற்கு மறுக்கவியலா மார்க்சிய–லெனினிய புரிதல் என்பது மட்டுமல்ல, இது 'ஒருதுருவ உலகு' என்று அழைக்கப்படும் இந்த உலகத்தில் அப்பட்டமான உண்மையாகவும் மக்களின் அன்றாட அனுபவமாகவும், இப்போது வெளிவந்துகொண்டிருக்கின்றது. சோசலிச முகாம் என ஒன்று இருப்பது இல்லையென்றாலும், முதலாளித்துவ–ஏகாதிபத்திய உலகம் போர்களை உருவாக்குவதிலிருந்து விலகியிருப்பதில்லை. ஏனெனில், முதலாளித்துவம் அதன் உயிர்வாழ்தலுக்காக தவிர்க்கவியலாமல் போரை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. இரக்கமற்ற முதலாளித்துவ சுரண்டலுக்கும் மேலாக, பொருளாதாரத்தை இராணுவமயமாக்குதல் எனும் மற்றுமொரு கொடுமையான நடவடிக்கையை அது கையிலெடுக்கின்றது.

முதலாளித்துவமானது மக்களைச் சுரண்டி, அவர்களை ஓட்டாண்டிகளாக்கி அதன் மூலம் சந்தை நெருக்கடியினையும் தொழில் மந்தத்தினையும் உருவாக்குகின்றது. மரித்துக்கொண்டிருக்கும் முதலாளித்துவத்தில் அத்தகைய மந்த நிலையிலிருந்து மீண்டுவர முடியாமல், அவர்கள் விரிவான பொருளாதார இராணுவமயமாக்கலுக்கு செல்கின்றனர். முதலாளித்துவ அரசாங்கமானது முதலாளிகளுக்கும்–ஏகபோகங்களுக்கும் அவர்கள் மூழ்கியிருக்கும் தீர்க்கமுடியாத சந்தை நெருக்கடியிலிருந்து எப்படியாவது மீள்வதற்கு, மிகப்பெரும் நிதி உதவி, மானியங்கள், இலவசங்கள் மற்றும் பரந்த மனதுடன் கடனிலிருந்து மீட்டெடுக்கும் திட்டங்களையும்கூட (Bail Out) வழங்கிடுவதற்காக, மக்களின் பணத்தை அபகரிக்கின்றது.

சாமானிய மக்களின் வாங்கும் சக்தி வேகமாக சுருங்கி வருவதன் காரணமாக, தொழில் உற்பத்திக்கான சந்தை இல்லாதிருக்கையில், முதலாளிகளும்–ஏகபோகங்களும் அதிகபட்ச லாபத்தை தேடுவதால், பெரிய அளவிலான இராணுவ தளவாடப் பொருட்களை உற்பத்தி செய்வதின் மூலமாக சந்தையை செயற்கையாகத் தூண்டிவிடுகின்றனர். அடிக்கடி மக்களுக்கான மானியத்தை குறைத்து, மக்கள் நலன் சார்ந்த விஷயங்களில் நிதியைக் குறைத்து, ஆயுதங்களை உற்பத்தி செய்யும் இந்த ஏகபோகங்களுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் மக்களின் பொதுப்பணத்திலிருந்து நிதியுதவி வழங்கிடும் இந்த அரசாங்கமானது, அதுவே பொது கஜானாவிலிருந்து பணத்தையெடுத்து அந்த ஆயுதங்களை மீண்டும் வாங்குபவராக மாறிவிடுகிறது. அதன் பின், உலகம் முழுவதிலும் எப்போதும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆயுத சந்தையில் தேங்கிக் கிடக்கும் பழைய ஆயுதங்களை வெளியேற்றிட புதிய ஆயுதங்களைப் விற்பனை செய்வதின் மூலம் ஆயுத தொழிற்சாலைகளை தொடர்ந்து இயங்கச்செய்திட வைக்கின்றது.

இவ்வாறாக முதலாளித்துவ அரசாங்கமானது, ஆயுத உற்பத்தியிலும் ஆயுதங்கள்– வெடிமருந்துக் கலன்களை விற்பனை செய்வதிலும் பங்குதாரராகி விடுகின்றது. ஆனால், பொருளாதாரத்தை இராணுவமயமாக்குவதின் மூலம் உற்பத்தியை தக்கவைத்துக் கொண்டிருக்க, அந்த ஆயுதங்களை நுகர்வதற்கான வழிவகைகளை கண்டுபிடித்தாக வேண்டும். அது வட்டாரப்போராக அல்லது பிராந்திய போராக, இனப்போராக அல்லது மத அடிப்படைவாதப் போராக எதுவாக இருந்தாலும், போர்கள் என்பது அடிக்கடி நடக்காவிட்டால், நிரந்தரமான போர் என்பது நடக்காவிட்டால் இராணுவ உற்பத்தியை தக்கவைத்துக்கொண்டிருப்பது முடியாது. போர்கள் நடைபெறாவிட்டால் அவர்களது தொழிற்சாலைகள் முடங்கி இக்கட்டான நிலைக்கு சென்றுவிடும். எனவேதான் மிகவும் போர்வெறிகொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் தலைமையிலான ஏகாதிபத்திய போர்வெறியர்களால் எரியூட்டி வளர்த்து தூண்டிவிடப்பட்ட போர்கள் ஒன்றன்பின் ஒன்றாக நடந்துகொண்டிருக்கின்றன.

இச்செயல்முறைப் போக்கினை அப்படியே மேல் நோக்கி வைத்திருக்கவும் மற்றும் இராணுவமய பொருளாதாரத்தை பேணி வளர்த்திடவும் முதலாளித்துவம்–ஏகாதிபத்தியத்திற்கு போர் மனப்போக்கும், வெறியுணர்வும் மற்றும் எந்நேரத்திலும் போரில் குதித்திட தயாராயிருக்கும் பகையுணர்வும் தேவைப்படுகின்றது. ஆக, அதற்கு இடையறாது ஆயுத மற்றும் தொடர்புடைய துணைபொருட்களின் வணிகமும் வியாபாரமும் மற்றும் ஜனநாயக அல்லது மனித உரிமையின் எதிரிகள் மீது, அங்கே இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவர்கள் மீது பாய்வதற்கான பிரச்சாரமும் தேவைப்படுகின்றது.

ஏகாதிபத்திய சக்திகள் ஆயுதங்களை ஏராளமாக உற்பத்தி செய்கின்றன. அவைகளை பலம் குறைந்த நாடுகளுக்கு தாராளமாக விற்பனை செய்கின்றன. அவற்றை வாங்கும் நாடுகளின் ஆளும் முதலாளித்துவ வர்க்கமும்கூட அவர்களின் சொந்த மக்களை இடையறாது சுரண்டுவதனால் அவர்களின் மீது எப்போதும் அதிகரித்துக்கொண்டேயிருக்கும் மக்களின் அதிருப்தியை அது உருவாக்குகின்றது. மக்களின் அதிருப்தி உணர்ச்சியை நசுக்கவும், மக்களது எதிர்ப்பு ஏதுமிருப்பின் அதனை தடுத்து, நிலவுகின்ற ஆட்சிக்கு எதிரான அவர்களின் கோபத்தை வேறு பாதையில் திருப்பிவிடவும் அவர்களுக்கு தேவையிருக்கின்றது. எனவே, முதலாளித்துவ நாடுகளின் ஆட்சியாளர்களுக்கு, அந்நாடுகள் சிறியதாயினும் அல்லது பெரியதாகினும், அந்நாடுகள் பலம் கொண்டதானாலும் அல்லது இல்லாவிட்டாலும், ஏதாவது ஒரு காரணத்தைக்காட்டி அவர்களது மக்கள் முன்பாக பூச்சாண்டி காட்டி, போர்ப் பதட்டத்தை ஏற்படுத்தி போருக்கு தாயாராக வேண்டியதன் அவசியத்தை மக்களிடம் ஏற்றுக் கொள்ள வைத்திடுகின்றனர். ஆக, அவர்கள் பாதுகாப்பு, அதாவது இராணுவ பட்ஜெட்டை பல மடங்கு அதிகரிக்கின்றனர்.

இவ்வாறாக, சிறிய நாடுகளும் அல்லது பலம் குன்றிய முதலாளித்துவ நாடுகளும்கூட, பெரும் ஏகாதிபத்திய நாடுகளுடன் சேர்ந்துகொண்டு அவர்களின் போர் விளையாட்டில் பங்குதாரராகி விடுகின்றன. போர் மனப்பான்மையை உருவாக்கிட, அவர்களின் சக்திவாய்ந்த கூட்டாளிகளுடன் சேர்ந்து கொண்டு இவர்களும் ஒத்து ஊத ஆரம்பித்து விடுகின்றனர். நிலவுகின்ற சூழ்நிலைமையில் எந்நேரத்திலும் ஆளுகின்ற வர்க்கம், வாய்ப்புள்ள அதிகபட்ச லாபத்தை அறுவடை செய்யவே இவையெல்லாம் நடைபெறுகின்றன.

மேலே சுருக்கமாக கோடிட்டுக்காட்டியவாறு கலவர பூமியான–போரினால் சூறையாடப்பட்ட

தொடர்ச்சி 12ம் பக்கம்

## அமெரிக்க அதிபர் தேர்தல்

# ஏகபோக முதலாளிகள் விரும்பும் வேட்பாளரையே துன்பத்தில் உழலும் மக்களை வஞ்சகமாக தேர்ந்தெடுக்கவைத்தனர்

*கிட்டத்தட்ட 2 ஆண்டுகால பிரச்சாரத்திற்குப் பிறகு யுஎஸ் அதிபர் தேர்தல் நடந்து முடிந்துள்ளது. இந்தக் காலத்தில், யுஎஸ்ஏவில் மட்டுமல்லாது, உலகம் முழுவதும் பதற்றம்–யூகம்–எதிர்பார்ப்பு அடங்கிய பரபரப்பான சூழல் உருவாக்கப்பட்டது. பல்வேறு நாடுகளின் ஆட்சியாளர்கள், அங்குள்ள பெருவாரியான மக்களும் கூட, உலகின் மிகவும் வளமான போர்வெறி நாடாகவும் அதே நேரத்தில் ஜனநாயகத்தின் பாதுகாவலன் என்று தன்னை அழைத்துக் கொள்ளும் நாட்டில் என்ன நடக்கிறது, என்ன நடக்கப்போகிறது என்ற விவாதத்திற்குள் இழுக்கப்பட்டனர்.*

*ஆம், அதற்கு ஒரு ஜனநாயக பாரம்பரியமுண்டு. அந்த நாடு ஒரு காலத்தில் மக்களால், மக்களுக்காக மக்களின் என்ற பூர்ஷ்வா பாராளுமன்ற புகழ்பெற்ற ஜனநாயகக் கோட்பாட்டை பெருமையாக உயர்த்திப் பிடித்தது. ஆனால் இன்று, அந்த நாடு செல்வந்தர்களுக்காக செல்வந்தர்களால் ஆளப்படும் நாடாகி விட்டது என்பதை அந்த நாட்டு மக்களே வேதனையோடு ஒப்புக்கொள்கின்றனர். இருப்பினும், தேர்தல் தற்போது முடிந்துவிட்டது, முடிவு சிலருக்கு அதிர்ச்சியாகவும் மற்றும் சில உற்சாக மூட்டுவதாகவும் அமைந்துள்ளது. உண்மையில் என்ன நடந்துள்ளது என்பதைப் பார்ப்பதுடன் எதிர்காலம் எவ்வாறிருக்கப்போகின்றது என்பதையும் பார்ப்போம்.*

### ஆடம்பரமான பிரச்சாரத்திற்கு செல்வந்தர்களின் நிதி உதவி

முதலில் ஒன்றை பார்ப்போம். செல்வந்தர்களால் செல்வந்தர்களுக்காக ஆளப்படும் நாடு என்று யுஎஸ்ஏ குறிக்கப்படுவது ஏன்? 2012 தேர்தலில் 7 பில்லியன் அமெரிக்க டாலர்கள் (சுமார் 47500 கோடி ரூபாய்) செலவழிக்கப்பட்டது, அதில் 2.6 பில்லியன் டாலர்கள் (சுமார் 17600 கோடி ரூபாய்) அதிபர் தேர்தலுக்காக செலவானது. ஒவ்வொரு முதலாளித்துவ நாட்டிலும் எல்லா விலைவாசியும் உயர்ந்து விட்டதால் தற்போது 2016 தேர்தலில் செலவு இரண்டு மடங்காகியிருக்கக்கூடும். ஏழைகளால் இவ்வளவு பெரிய தொகையை செலவழிக்க அல்லது முதலீடு செய்ய முடியாது. மொத்த தேர்தல் செலவில் 68% தொகையை யுஎஸ்ஏ மக்களில் 1 விழுக்காடே உள்ள பகாசுர செலவந்தர்களால் வழங்கப்படுகிறது. 1980களின் தொடக்கத்தில் அமெரிக்க அரசியல்வாதிகளுக்கு நேரடியாக வக்காலத்து வாங்கும் குழுக்கள் 200 மில்லியன் டாலர்களை (1300 கோடி ரூபாய்) செலவழித்தன; 2002இல் அவர்கள் 1.8 பில்லியன் டாலரும் (சுமார் 12000 கோடி ரூபாய்), 2012இல் 3.3 பில்லியன் டாலரும் (சுமார் 22000 கோடி ரூபாய்) செலவழித்தனர். பணவீக்கத்தை கணக்கிலெடுத்துப் பார்த்தால், பார்த்தால், செலவுத் தொகை கடந்த 30 ஆண்டுகளில் 7 மடங்கு அதிகரித்துள்ளது.

இந்த நிதிஅளிப்பு மற்றும் செலவில், பிரதான இருகட்சிகளான, குடியரசு மற்றும் ஜனநாயகக் கட்சி, என எந்த ஒன்றும் இதற்கு விதிவிலக்கல்ல. அழுகிப்போன முதலாளித்துவம், அதாவது ஏகாதிபத்திய காலமான இன்றைய நாட்களில் எந்த பூர்ஷ்வா கட்சியும் இதில் ஒரேமாதிரியாகவே உள்ளன. அவர்களது எஜமானர்களான ஆளும் ஏகபோகங்களும் பன்னாட்டு நிறுவனங்களும், ‘சலுகைபெறும் குழுக்களும்’ தங்களது ஆசியை யாராவது ஒருவருக்கு வழங்குவதில் கொஞ்சமும் சளைக்கவில்லை.

### செல்வந்தர்கள் முன்னேறுகிறார்கள், ஏழைகள் தகர்க்கப்படுகிறார்கள்

யுஎஸ்ஏவானது செல்வந்தர்களுக்காக செல்வந்தர்களால் ஆளப்படும் நாடாக இருந்தாலும், உண்மையில் அது பணக்காரர்களைக்கொண்ட நாடுதானா? கௌரவமான வருமானம் தருகின்ற வேலைகள் தொடர்ச்சியாக சரிந்துவந்ததினால், நடுத்தர வர்க்கத்தின் ஊதியம் அதாவது யுஎஸ்ஏவில் பணிபுரியும் மக்களின் கௌரவமான வருமானமும் செலவும் 1996லிருந்து தேக்கமடைந்துள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னர் நடந்ததைப்போல், நிதிச் சந்தை மற்றுமொரு நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருக்கும் இந்நேரத்தில், வேலை மற்றும் ஊதியங்களின் பிரச்சினைகளும் மேலும் சிக்கலாகும்.

அமெரிக்காவில் ஒரு தலைமுறைக்கு முன்னர் இருந்த ஒற்றை வருவாய் கொண்ட குடும்பத்தின் நிலைமை தற்போது இருக்கும் இரட்டை வருவாய் கொண்ட குடும்பத்தினரின் நிலைமையைவிட நன்கிருந்தது.

மூன்றில் ஒரு பங்கு அமெரிக்கர்கள் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கடன்வழங்கும் நிறுவனங்களிடம் கடனாளிகளாக உள்ளனர்; கல்லூரி மாணவர்களில் 70% பேர் அவர்களது 18ஆம் வயதிலேயே வறுமைக்குள் செல்கின்றனர். வருவாய் குறைவால் அவர்கள் கடன் திருப்பி செலுத்த முடியாதவர்களாகின்றனர். கடந்த ஆண்டு, 8,20,000 அமெரிக்கக் குடும்பங்கள் திவாலானவர்களாக அறிவிக்கப்பட்டனர். இதைத்தான் ஹார்வர்டு பல்கலைக்கழக கல்வியாளரும் ஜனநாயகக் கட்சியின் செனட் உறுப்பினரும் கூறியுள்ளார். அவரே கேள்வி எழுப்பி பதிலளித்துள்ளதாவது: எதற்காக மக்கள் இந்த அளவு இவ்வளவு கடுமையாக கசக்கப்படுகின்றனர்? மாறியிருப்பது கொள்கைதான். ‘தனது நடுத்தர வர்க்கத்தை வலுப்படுத்தவேண்டும் என்றிருந்த நாடு தற்போது தனது செல்வந்தர்களை பலப்படுத்தும் நாடாக மாறிவிட்டது.’ விளைவு? ‘1935 லிருந்து 1980 வரை உருவான புதிய சொத்துக்களில் 70 விழுக்காடு 90% கீழ்நிலையிலிருக்கும் மக்கள் வசமும் மீதி 30% சொத்துக்கள் மீதமுள்ள 10% மேட்டுக்குடி மக்களிடமும் குவிந்தது. 1980லிருந்து 2016வரை உருவான புதிய சொத்துக்களில் கிட்டத்தட்ட அனைத்தையும் மேட்டுக்குடி 10% மக்களே குவித்துள்ளனர், மற்ற 90% பேரிடம் ஏதுமில்லை.’ ஆக ஏற்றத்தாழ்வு அதிகரிக்கிறது, செல்வந்தர்களுக்கும் ஏழைகளுக்குமிடையிலான இடைவெளி தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

தற்போது சாமானிய அமெரிக்கர்கள் உணவுக்கு 13% குறைவாகவும், உடைக்கு 46% குறைவாகவும், இதர சாதனங்களுக்கு 48% குறைவாகவும் செலவழிப்பதாகக் கூறப்படுகிறது. 30 ஆண்டுகளுக்கு முந்தைய நிலையோடு ஒப்பிடுகையில், அவர்கள் போக்குவரத்திற்கு 11% அதிகமாகவும், வீட்டிற்கு 57% அதிகமாகவும், மருத்துவக் காப்பீட்டிற்கு 104% அதிகமாகவும், கல்லூரிக் கல்விக்கு 275% அதிகமாகவும் குழந்தை பராமரிப்பிற்கு 953% அதிகமாகவும் செலவழிக்கின்றனர். நிலையான செலவுகள் விண்ணைத்தாண்டி சென்றுகொண்டிருக்கின்றன.

ஒருகாலத்தில் புகழ்பெற்ற தொழில் குழுமமாக, ஏன்? யுஎஸ்ஸின் கார் உற்பத்தி மையமாகத் திகழ்ந்த டெட்ராய்ட் பெருநகரத்தின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. சிறிது காலத்திற்கு முன்பு அது திவாலானதாகக் கூட அறிவிக்கப்பட்டது. முன்பு இந்த ஆட்டோமொபைல் தொழிற்துறையில் பணிபுரியும் அனைத்து தொழிலார்களிடமும் கார் இருந்தது, அவர்களுக்கான மருத்துவ வசதியையும் பாதுகாப்பையும் நிறுவனமே வழங்கியது, எல்லாவிதத்திலும் வளர்ச்சி இருந்தது. தற்போது ஆறில் ஒரு வீடு காலியாகவும் சிதிலமடைந்தும் உள்ளது. வேலையின்மை பெருகிவிட்டது, சமூகப் பாதுகாப்பு நிறுத்தப்பட்டு விட்டது, நகரம்/மாவட்டங்கள் ஓய்வூதியக்காரர்களுக்குக்கூட நிதி வழங்க முடியாமல் உள்ளன. அரைவயிற்றை நிரப்பவே மக்கள் அல்லாடுகின்றனர்.

இந்த நிலை குறிப்பிட்ட சில நகரங்களில் மட்டுமல்லாது நாடுமுழுவதும் காணப்படுகின்றது. நாடு முழுவதுமுள்ள உற்பத்தித் தொழிற்சாலைகளின் பணிகள் அவுட்சோர்சிங் மூலம் நடைபெறுகின்றன. மிகச்சரியாகச் சொல்வதானால் உற்பத்தித்துறை வேலைகள் யாவும் குறைந்த ஊதியம், குறைவான சுற்றுச்சூழல் கட்டுப்பாடுகள் மற்றும் இதர செலவு குறைவு ஆதாயங்கள் உள்ள நாடுகளுக்கு செல்கின்றது. அவுட்சோர்சிங் தவிர தேக்கநிலை காரணமாக ‘நிரந்தர வேலைகளும்’ காணாமல் போகின்றன. அதற்குப் பதிலாக ஒப்பந்தப் பணிகள் பகுதிநேர வேலை, சமூகப்பாதுகாப்புகள் குறைப்பு, சம்பளக் குறைப்பு, குறைந்த ஊதியத்தில் அதிக நேர வேலை போன்றவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதோடு நீர்க்குமிழிப் பொருளாதாரமும் 2008இல் ஏற்பட்ட சப் பிரைம் கடன் நெருக்கடியும் வேலையின்மையை மேலும் அதிகரித்துவிட்டன. அதோடு கூடவே, மக்களின் குறிப்பாக உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரம் வீழ்ந்ததோடு சேர்ந்து, உழைக்கும் மக்களின் வறுமையும் பாதுகாப்பின்மையும், அதோடு வீடில்லாதோர் எண்ணிக்கை, பிச்சையெடுத்தலும் குற்றங்களும் அதேபோன்று இனவெறி மோதல்கள் போன்ற சமூகக் குற்றங்களும் பெருகிவருகின்றன. யுனிசெஃப் அறிக்கையின்படி, உலகின் குழந்தைகள் வறுமையின் ‘தலைமையாக’ யுஎஸ்ஏ திகழ்கிறது. 60 டாலருக்காகவும் சில உணவுகளுக்காகவும் பெண்கள் தங்களையே விற்கும் அளவிற்கு நிலைமை சென்றுள்ளது. ஆனாலும்கூட, பொருளாதாரம் மீண்டுவருவதாக அடிவருடி பொருளாதார நிபுணர்களும் விமர்சகர்களும் கதைகளை பரப்பி வருகின்றனர். அப்படி வரக்கூடிய பொருளாதார மீட்சியாலும் கூட 1% மட்டுமே உள்ள வசதியான செல்வந்தர்களே பலனடைகின்றனர் என்பதை பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களே ஒப்புக் கொள்கின்றனர். ‘வெளியிலிருந்து பார்ப்பதற்கு அமெரிக்கப் பொருளாதாரம் பிரம்மாண்டமானதாகத் தெரியலாம், ஆனால் இங்கே உள்ளே இருக்கும் குடும்பங்களுக்கு பொருளாதாரம் வேறுவிதமாக இருக்கிறது.’ என்று அதே ஹார்வர்டு கல்வியாளரும் ஜனநாயகக் கட்சி செனட் உறுப்பினரும் கூறியுள்ளார்.

### ஆளும் ஏகபோகங்களின் மிகவும் நம்பிக்கைக்குரிய இரண்டு கட்சிகளுக்கிடையில் மட்டுமே தேர்வு வாய்ப்பு சுருக்கப்படுகிறது

எனவே அமெரிக்க உழைக்கும் மக்கள் முன் உள்ள பிரதான கேள்வி என்னவென்றால்: அதிபர் தேர்தலில் 99% அமெரிக்கர்களால் தங்களது சொத்துக்களை தொடர்ந்து குவித்து தங்கள் அந்தஸ்தை அப்படியே நிலைநாட்டிட முயற்சிக்கும் 1% செல்வந்தர்களைத் தோற்கடிக்க முடியுமா? மக்களின் இந்த மனநிலையை வேட்பாளர்களும் அறிவர். ஆளும் ஏகபோகங்களுக்கு அடிவருடி சேவகம் செய்வதில் விடாப்பிடியாக ஈடுபாடு காட்டுவதில் தங்களை நிரூபித்துள்ள குடியரசு மற்றும் ஜனநாயகக் கட்சிகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும்படி மக்களை திணிக்கும் அமெரிக்க ஏகபோகங்கள் வகுத்துள்ள இருகட்சி பாராளுமன்ற அமைப்பின் வாக்கு அரசியலில் அவர்கள் தள்ளப்படுகின்றனர். இங்கு ஜனநாயகக் கட்சியிலிருந்து பெர்னி சாண்டர்ஸ் மற்றும் ஹிலாரி கிளிண்டனும் மாபெரும் பழைய கட்சி என்று அழைக்கப்படும் குடியரசுக் கட்சியின் டொனால்டு டிரம்ப் என மூன்று வேட்பாளர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இந்த மூவருமே, பொதுமக்களின் ஆதரவைப் பெறுவதற்காகத் தங்களுக்கே உரிய வகையில் பெருவாரியான மக்களின் பொருளாதார விரக்திகள் குறித்து தொடக்கத்தில் பேசினர். ஆனால் பிரச்சாரத்தின் போக்கில் அவர்களது தொனி மாறிவிட்டது.

அவர்களில் பெர்னி சாண்டர்ஸ் மக்களின் பிரச்சினைகள் குறித்து தீவிரமாகப் பேசிய காரணத்தால், அத்துடன் ‘வால் ஸ்ட்ரீட்டை ஆக்கிரமிப்போம்’ இயக்கத்தின் இளம் செயல்பாட்டாளர்கள் உள்ளிட்ட இளம் முற்போக்கு சிந்தனையாளர்களின் பெரும்பான்மையினரின் உற்சாக ஆதரவை அவர் பெற்றார் என்று கூறப்பட்டது. 5 டாலர் முதல் 10 டாலர் வரையிலான சிறிய நன்கொடைகள் மூலம் பல பத்தாயிரக்கணக்கான சாமானிய ஏழை அமெரிக்கர்கள் இவரது பிரச்சாரத்திற்கு உதவினர். தொழிலாளர்களின் வாய்ப்புக்கள் எதையும் பறிக்கின்ற நிதிக்கட்டமைப்புகளையும் லாபிகளின் அதிகாரத்தையும் சாண்டர்ஸ் சுட்டிக்காட்டினார். யுஎஸ் பன்னாட்டு நிறுவனங்கள் தங்களது உற்பத்தி மற்றும் அசெம்பிளி யூனிட்டுகளை வெளிநாடுகளுக்கு கொண்டுசெல்வதை கடினமாக்கிட வேண்டும் என்றும் கோரினார். அதிபர் வேட்பாளராக ஹிலாரி கிளிண்டனோடு மோதிய அவர் அமெரிக்காவின் யூக மையமாகத் திகழும் வால் ஸ்ட்ரீட்டோடு ஹிலாரிக்கு இருந்த நெருக்கமான உறவை கடுமையாகச் சாடினார். ஆனால் அவரது ஜனநாயகக் கட்சியில் சூப்பர் பிரதிநிதிகளால் அவரது இந்த தீவிர அணுகுமுறையை ஜீரணிக்க முடியவில்லை எனவே யுஎஸ் பன்னாட்டு நிறுவனங்களும் பெரிய கார்ப்பொரேட்டுகளும் சாண்டர்ஸை ஆதரிக்கமாட்டார்கள் என்ற பயத்தில் ஹிலாரியைத் தேர்வு செய்தனர். எனவே போட்டியின் பாதியில் சாண்டர்ஸ் விலக்கப்பட்டார். அதன் பின்னர் மக்களுக்கு இரண்டே வாய்ப்புகள் இருந்தன. ‘இருவரையுமே எனக்குப் பிடிக்கவில்லை’ ’யார் வெற்றிபெற்றாலும் நமக்கு ஏதும் நன்மையில்லை’ என்று சாமானிய மக்கள் பேசிக்கொண்டனர்.

தொடர்ச்சி 10ம் பக்கம்

### அமெரிக்க அதிபர் தேர்தல்

# அமெரிக்காவில் அனைத்தையும் இழந்து ஏற்றத்தாழ்வு அதிகரித்து ஓட்டாண்டியாகும் மக்களின் எண்ணிக்கை பெருகுகின்றது

**9**ம் பக்கத் தொடர்ச்சி

### ஹிலாரி கிளிண்டனின் வரலாற்றுப் பின்னணி

முன்னாள் அதிபர் பில் கிளிண்டனின் மனைவியும் பராக் ஒபாமாவின் ஆட்சியில் அரசின் செயலாளராகவும் (Secretary of State) இருந்த ஹிலாரி கிளிண்டன் அமெரிக்க ஏகபோகங்களின் கண்ணின் கருமணியாகத் திகழ்ந்தார். சாண்டர்சுக்கு மக்களிடையே கிடைத்த ஆதரவானது ஹிலாரியை சில இடதுசாரி சொற்றொடர்களைப் பேச நிர்ப்பந்தித்தது. அவரும், சாண்டர்சைப் போலவே, மாணவர்கள் கடன்சுமை, அதேபோல் தேர்தல் பிரச்சாரத்திற்கான நிதி தொடர்பான சீர்திருத்தங்கள் போன்றவற்றைப் பற்றிப் பேசினார். அவர் பெருகிவரும் ஏற்றத்தாழ்வுகளுக்கு தீர்வு வேண்டும் என்றும் கூடப் பேசினார். அவரது நிகழ்ச்சிகளுக்கு துணிச்சலாக இடையூறு விளைவித்த 'கருப்பின மக்களின் உயிர்களும் மதிப்பு வாய்ந்ததே' இயக்கமும் கருப்பின மக்கள் மீதான போலீஸ் கொலைகளுக்கு எதிராக வீதிகளில் திரண்ட கிளர்ச்சிகளும் போலீஸ் அத்துமீறல்களுக்குப் பலியானவர்களின் தாயார்களை ஹிலாரியின் பிரச்சாரத்திற்கு வரவழைத்திட வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது. ஆனாலும் கூட, அது அவரது முந்தைய வரலாற்றை அழிக்கவோ அல்லது அவர் வலதுசாரிகளின் பக்கம் செல்வதை தடுக்கவோ முடியவில்லை.

பில் கிளிண்டன் ஆட்சியில்தான் விளிம்பு நிலையில் வாழும் மக்களுக்கு குறைந்த பட்ச ஊதியத்தை வழங்கும் நலத்திட்டம் **1996**இல் ஒழிக்கப்பட்டது. இதில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் குழந்தைகளை வைத்திருக்கும் ஏழைப்பெண்களே. அவர்களில் பெரும்பாலோனோர் கருப்பர் இனத்தை சேர்ந்தவர்கள். நீண்ட காலமாகவே நிலவிவரும் இனவெறி வன்முறையின் காரணமாக பொருளாதாரரீதியில் அடிமட்டத்திலிருப்பதால், இவர்கள் தான் பெரும்பாலும் பாதிக்கப்பட்டனர். ஜனநாயக அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹோண்டுராஸ் அதிபரை வெளியேற்றிட, தான் யுஎஸ் அரசு செயலாளராக இருந்தபோது அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆதரித்து மத்திய அமெரிக்காவில் அமெரிக்க ஆதரவு 'நிலைத்தன்மையை' கொண்டு வந்ததிலும் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தியதாக 'ஹார்டு சாய்சஸ்' என்ற தனது சுய சரிதையில் ஹிலாரி கிளிண்டனே ஒப்புக்கொண்டுள்ளார். ஈராக்கை அழித்ததை, லிபியாவின் எதிர்புரட்சியை அதேபோல் பல லட்சம் பேரைக் கொன்று அழிவை உருவாக்கிய சிரியாவை நிலைகுலையச் செய்தது ஆகியவற்றிற்கு ஒப்புதல் அளித்ததையும் ஹிலாரி ஒப்புகொண்டுள்ளார். தற்போதைய அரசாங்கத்தின் மக்கள் விரோதக் கொள்கைகளாலும் போர் பொருளாதாரத்தாலும் பாதித்து விம்மிக்கொண்டிருந்த மக்கள் தங்கள் பிரச்சினைகளை தீர்க்கவல்ல உண்மையான மாற்றாக ஹிலாரியை நம்ப இயலவில்லை. மாறாக அவரும் அந்த ஆட்சி நிர்வாகத்தின் ஒருவராகவே அடையாளம் காணப்பட்டார்.

### டொனால்டு டிரம்பும் சூழ்ச்சிகரமாக வடிவமைக்கப்பட்ட அவரது பேச்சுக்களும்

ஊடகங்களால் டான் என்று செல்லமாக அழைக்கப்பட்ட டொனால்டு டிரம்ப் குறித்து பார்ப்போம். டொனால்டு டிரம்ப் ஒரு ரியாலிட்டி ஷோ நடத்துபவராவார். அவர் ஒரு கொள்கை கோட்பாடற்ற வணிக பெரும்புள்ளியும் ஒப்பீட்டளவில் அரசியலுக்கு புதியவருமாவார். உலகமயம் மற்றும் ஏகபோகங்களின் ஆட்சியின் காரணமாக மக்களிடையே எழுந்துள்ள பொருளாதார பாதுகாப்பின்மை மற்றும் அதிருப்தியை தனது சாதுரிய பேச்சுக்களால் தன் பக்கம் திருப்பக்கூடிய திறமை பெற்றவர் ஆவார். அவரும் வங்கிகளைக் கடுமையாகச் சாடினார். அதே நேரத்தில் புலம்பெயர்ந்து வந்தவர்கள் மீது கவனமாக இனவெறிவாதத்தை வைத்தார், அமெரிக்க வெள்ளை இன மக்களின் வேலைவாய்ப்புகளை இந்த புலம் பெயர்ந்தவர்கள் பறித்துக்கொள்வதாகவும் புலம் பெயர்ந்தவர்களின் சமூக நலத்திட்டங்களுக்காக அமெரிக்க மக்கள் பணம் கொடுக்க வேண்டியிருப்பதாகவும் வெறுப்புப் பிரச்சாரத்தை கட்டவிழ்த்துவிட்டார். மெக்சிகோவிலிருந்து புலம்பெயர்ந்துவந்தவர்களை 'கிரிமினல்கள், கற்பழிப்பவர்கள் மற்றும் போதைப் பொருட்களை கடத்துபவர்கள் என்று சித்தரித்த அவர் மெக்சிகோவுக்கும் யுஎஸ்க்கும் இடையிலான எல்லையில் மெக்சிகோவின் செலவில் பெரிய சுவர் கட்டி அமெரிக்காவிலுள்ள கணக்கில் வராத புலம் பெயர்ந்தவர்களை மெக்சிகோவை விட்டே வெளியேற்ற வேண்டும் என்ற கொள்கையையும் முன்மொழிந்தார். 'ஆவணப்படுத்தப்படாத' என்று அவர் அலங்காரமாகப் பயன்படுத்திய வார்த்தை புலம்பெயர்ந்தவர்களுக்கு எதிரான கூர்மையான வார்த்தையாக அமைந்தது, அதன் பின்னர் புலம் பெயர்ந்து வந்தவர்கள் தங்களது வேலைகளைப் பறிக்கின்றனர் என்ற விஷம கருத்தை நம்பி குழப்பத்தில் இருந்த ஒருதரப்பு அமெரிக்கர்களின் மனதில் இது கோபமாக மாறியது. அதேபோல, இந்தியர்கள் உள்ளிட்ட வெளிநாட்டு பணியாளர்களுக்கு வழங்கும் ஹெச்1பி விசா திட்டத்தை நிறுத்த வேண்டும் என்ற அவரது மற்றொரு முழக்கமும் சிலரிடம் வெறுப்புணர்வை விளைவித்தது. முஸ்லீம்கள் எல்லோரையும் தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தி அவர்களையும் உள்ளே நுழைய விடக்கூடாது என்பது டொனால்டின் மற்றொரு தூண்டிவிடும் விஷமப்பிரச்சாரமாகும். அமெரிக்காவின் முதல் கருப்பு அதிபரான பராக் ஒபாமா ஒரு அமெரிக்கரே அல்ல, அவர் அங்கு பிறந்தவரேயல்ல என்ற பிரச்சாரத்தையும் அவர் தொடங்கினார். ஒபாமா ஒரு கிருஸ்துவர். அவர் அமெரிக்காவில் பிறந்தவர். அதற்கான அத்தாட்சியை அவர் பல ஆண்டுகளுக்கு முன்னரே காண்பித்திருக்கிறார். அமெரிக்காவை மீண்டும் பெருமைமிக்க நாடாக மாற்றுவேன் என்ற அவரது பொருளாதார கோஷத்திலும் இனவெறிவாத உள்ளடக்கமும் வெளிநாட்டு பொருள்களுக்கு அதிக வரி விதிக்கும் உள்நோக்கமும் பொதிந்திருக்கின்றது.

பன்னாட்டு நிறுவனங்கள், ஊடகங்கள், திருமதி ஹிலாரி மற்றும் ஒபாமா ஆகியோரின் மிகப்பெரும் சதியென அவர்களை இணைத்துப்பேசிய டிரம்பின் அப்பட்டமான தேசியவெறிவாத பிரச்சாரமானது உலகம் முழுவதும் அமெரிக்க ஏகபோகவாதிகள் கொள்ளையடித்துக் கொண்டிருக்கும் குணாம்சத்துடன் மிகச்சரியாக ஒத்துப்போனது. அத்துடன் அமெரிக்க நிறுவனங்கள்மீது கோபம் கொண்டு ஒரு பாதுகாப்பற்ற மன நிலையிலிருந்த மக்களை கட்டவிழ்த்து விடுவதற்கு இப்பிரச்சாரம் போதுமானதாகவும் இருந்தது.

இது இரண்டுவிதமான வரவேற்புகளைப் பெற்றுள்ளது. 'டிரம்பை நான் முன்னிறுத்தினால், நாம் ஒழிக்கப்பட்டுவிடுவோம், அப்படி நடந்தால் அதற்கு நாமே பொறுப்பு என்று குடியரசுக் கட்சியின் செனட் உறுப்பினர் முன்கூட்டியே கணித்தார். வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஊடுருவலிலிருந்து அமெரிக்கப் பொருளாதாரத்தைக் காப்பதற்காக திரு டிரம்ப் எவ்வளவு அதிகமாக தொகையை உயர்த்தினாலும் அவரால் உள்நாட்டு உற்பத்தித் தொழில்துறையை மீட்டெடுக்க முடியாது என்று அச்சப்பட்டனர். மறுபுறம் வெறிபிடித்த வெள்ளை இன ஆதிக்கக் குழுவான க்லு க்ளக்ஸ் க்ளான் தங்களது ரேடியோவில் டொனால்டு டிரம்பிற்கு வாக்களிப்பது என்பது' தங்களது 'பாரம்பரியத்திற்கு செய்யும் துரோகம்' என்று அறிவித்தனர். அரசியல்வாதிகளையும் நன்கொடை அளித்த பணக்காரர்களையும் 'உலகமயமாக்கல் மேலும் பணக்காரர்களாக்கியிருக்கின்றது. ஆனால் அதே உலகமயமாக்கல் நமது லட்சக்கணக்கான தொழிலாளர்களை வறியவர்களாகவும் இதயம் நொறுங்கவும் செய்துவிட்டது' என்ற டிரம்பின் வார்த்தைகள் முன்னாள் உருக்குத் தொழிற்சாலை தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் விவசாயிகளின் இல்லங்களிலும் எதிரொலித்தது. அமெரிக்க நிறுவனங்களும், மிகவும் பாரபட்சமான தேர்தல் விதிகளும் எப்போதுமே அமெரிக்க கருப்பின மக்களுக்கு நியாயமானதாக இருந்ததே இல்லை. அதிகாரப்பூர்வ, கணக்கீட்டின்படி, வெள்ளை இன ஆண்களோடு ஒப்பிடுகையில் கருப்பின ஆண்கள் ஐந்து மடங்கு அதிகம் சிறையில் தள்ளப்படும் வாய்ப்பு உள்ளது. வாக்களிக்கத் தகுதியுடைய கருப்பின ஆண்களில் 8இல் ஒருவர் வாக்களிக்க தகுதியற்றவர்களாக 2014இல் ஆக்கப்பட்டனர். ஆக ஏகாதிபத்திய யுஎஸ் அரசு மற்றும் அதன் அங்கங்களால் நிறுவனமயமாக்கப்பட்ட பாரபட்சம் மற்றும் பாகுபாட்டிற்கு ஆளானதால் ஏற்கனவே அவமானப்பட்டிருந்த கருப்பர் இன மக்களின் ஒரு பிரிவினர் தங்களுக்கென ஒரு போதிய அரசியல் விழிப்புணர்வு இல்லாததால் குழப்பமடைந்தவர்கள் இந்த பிரச்சாரத்தால் தவறாக அழைத்துச் வழிநடத்தப்பட்டனர். அவர்களைப் பொருத்தமட்டில் டிரம்ப் குறைந்தபட்சம் உலகமயத்தால் பாதிக்கப்பட்ட, தொழிற்சாலை பணியாளர்களை, விவசாயிகளை மற்றும் வேலை கிடைக்காதவர்களை அல்லது வாழ்வதற்கு ஒன்றிற்கு மேற்பட்ட வேலைகளை செய்பவர்களைப் பற்றி பேசவாவது செய்கிறாரே என்று பார்த்தனர்.

மொத்தமாகப் பார்த்தால் டிரம்ப் தனது பிரச்சாரத்தில் பேசிய பிரச்சினைகள் பின்வருமாறு அ) சாமானிய அமெரிக்க வெகுஜனங்களின் அரசாங்க எதிர்ப்பு உணர்வை அவர் பயன்படுத்தினார் ஆ) அதன் போக்கில் அவர் உலகமயம், கார்ப்பொரேட் சுரண்டல், 'வாஷிங்டன் சூழ்நிலைமை' அதாவது யுஎஸ் நிர்வாகம் ஆகியவற்றை தான் விமர்சிப்பதாக அடையாளப்படுத்திக் கொண்டார் இ) அதே நேரத்தில் பழியை புலம் பெயர்ந்தவர்கள் மற்றும் முஸ்லீம்கள் மீது சுமத்தி கருப்பர்–விரோத இனவெறி மனநிலையைத் தூண்டிவிட்ட டிரம்ப் கொடூரமான முதலாளித்துவ சுரண்டலுக்கு எதிரான மக்களின் ஒற்றுமையை சீர்குலைப்பதற்காக உழைக்கும் அமெரிக்க வெகுஜனங்களின் பல்வேறு தரப்பினரிடையே நம்பிக்கையின்மை, வெறுப்புணர்வு மற்றும் பகையுணர்வைத் தூண்டிவிட்டார். ஆனால் துரதிருஷ்டவசமாக இத்தகைய பசப்பு வார்த்தைகளின் பின்னணியில் உள்ள நயவஞ்சக நோக்கத்தை கண்டறிவதற்கான உரிய அரசியல் விழிப்புணர்வு இல்லாததால் அமெரிக்க மக்களில் பெருவாரியான தரப்பினர் இந்த நச்சு விஷமப் பிரச்சாரத்தால் பலியானது ஆளும் ஏகபோகங்களுக்கு ஆதாயமானது.

### போலியான நேரடி விவாதம்

பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக அளவில் ஏராளமான பிரச்சினைகளால் யுஎஸ் மக்கள் சிக்கியுள்ள நிலையில் இவற்றில் ஒன்று கூட பிரதான போட்டியாளர்களான ஹிலாரி மற்றும் டிரம்ப் இடையிலான நேரடி விவாதங்களில் இடம் பெறவில்லை. மாறாக தனிநபர் தாக்குதல், சேற்றை வாரி இரைத்தல், மற்றும் தரக்குறைவான விமர்சனங்கள் போன்றவைதான் மிகக்கேவலமான முறையில் நடந்ததை காணமுடிந்தது. இது இன்று பூர்ஷ்வா அரசியல் எந்த அளவு வெறுமையாக திவாலாக உள்ளது, கலாச்சாரம் எந்த அளவு சீரழிந்துள்ளது, அரசியல் விவாதங்களின் அடிப்படையாக தரக்குறைவான வார்த்தைகள் மற்றும் இழிவான மொழி ஆகியவை நிறுவனமயமாக்கப்பட்டுவிட்டது என்பது அதுவும் உயர்பதவியில் இருப்பவர்கள் பேசும் விவாதங்களும் எப்படி சீரழிந்துவிட்டது என்பதையும் மீண்டும் முன் நிறுத்துகின்றன.

### புத்திசாலித்தனமான பிரச்சாரத்தின் மறைவில் இருக்கும் அகோரமான உண்மைகள்

தேர்தலில் வெற்றிபெற்ற உடனேயே தான் தெரிவித்த தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றன்பின் ஒன்றாக பல்டி அடித்ததிலிருந்து தேர்தல் பிரச்சாரத்தில் டிரம்ப் பேசியதெல்லாம் மக்களை குழப்பி தன்பால் ஈர்ப்பதற்காக செய்த தேர்தல் ஜாலமே என்பது அம்பலமாகியுள்ளது. புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் முஸ்லீம்கள் குறித்த கேள்வியில் அவர் எந்த அளவு தனது கருத்துக்களை தளர்த்துவார் என்பதை விரைவில் தெரிந்துகொள்ளலாம். ஆளும் அமெரிக்க ஏகபோகங்களின் நம்பத்தகுந்த பிரதிநிதியான அவர் இந்த அனைத்து பிரச்சினைகளிலும் அமெரிக்க மக்களிடையே உள்ள பிளவை அதிகப்படுத்தாவிட்டாலும் அதை அப்படியே நீட்டித்து வைத்திருக்கவே அவர் முயற்சிக்கிறார். இவற்றை டிரம்ப் மாற்றுவார் என்று சில ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அவர்கள் சொன்னது சரியென்று நிரூபிக்கப்பட்டாலும், டிரம்ப் ஏற்கனவே தூண்டிவிட்ட வெறுப்புணர்வும், நம்பிக்கையின்மை மற்றும் பகையுணர்வு சமுதாயத்தில் ஆழமாகவிட்டாலும் தொடர்ந்து நீடிக்கவே செய்யும். ஆங்காங்கே அடுத்தடுத்து நடைபெறும் இனவெறி, மதவாத அல்லத நிறவெறித் தாக்குதல்கள் இந்த வருந்தத்தக்க யதார்த்தத்திற்கு உதாரணமாகும். ஏற்கனவே வெள்ளைஇன ஆதிக்க வெறியர்கள் தங்கள் படையினர் இனவெறி தாக்குதல், கருக்கலைப்பு செய்ய பெண்களுக்கு அனுமதி மறுத்தல் மற்றும் புலம்பெயர்ந்தவர்களைத்

தொடர்ச்சி **11**ம் பக்கம்

அமெரிக்க அதிபர் தேர்தல்

# அமெரிக்க மக்களின் எதிரி முதலாளித்துவமேயன்றி குடியேறியவர்களோ அல்லது இஸ்லாமியர்களோ அல்லர்

10ம் பக்கத் தொடர்ச்சி

தாக்குதல் உள்ளிட்ட தங்களுக்கே 'உரிய வாழ்க்கையை' பாதுகாக்க தயாராகிவிட்டதாக தங்களது பேட்டிகளில் தெரித்துவருகின்றனர்.

## தேர்தல் நடைமுறைகள் எந்த அளவு நியாயமானது?

சமீபத்திய அதிபர் தேர்தல் எப்படியிருந்த தென்றால், மோசமான மனநிலையை உருவாக்கிய வேட்பாளரே இத்தேர்தலில் வெற்றி பெற்றார். அதோடு கூடவே தேர்தல் அமைப்பிலும் செயல் முறைப்போக்கிலும் கூடவேயிருக்கும் முறைகேடுகள், பொய்மைகள் இருந்தன. கடந்தகாலத்திலும், அதே போல் தற்போதும் தேர்தல் வாக்குப்பதிவு இயந்திரங்கள் மூலம் முறைகேடுகள் நடைபெற்றன என்ற குற்றச்சாட்டுகள் எழுந்தன; சில மூத்த யுஎஸ் கணினி விஞ்ஞானிகள் ஹிலாரியின் பிரச்சாரக் குழுவினர், விஸ்கோன்சின், மிச்சிகன் மற்றும் பென்சில்வேனியா போன்ற முக்கியமான மாகாணங்களில் மறுவாக்கு நடத்த வலியுறுத்த வேணுமெனக் கேட்டுக்கொண்டனர். டிரம்ப் வெற்றிபெற்ற இந்த மூன்று ஊசலாட்டமான மாகாணங்களில் முறைகேடுகளோ அல்லது கைப்பற்றுதலோ நடந்திருக்கலாம் என்று அவர்கள் குற்றம்சாட்டுகின்றனார். அதோடு வாக்காளர் பட்டியல்களிலும் முறைகேடுகள், குறிப்பிட்ட சமூகத்தை சேர்ந்தவர்களின் பெயர்கள் வாக்காளபட்டியலிலிருந்து நீக்குதல், வாக்குப்பதிவு மையங்களுக்கு வாக்காளர்கள் வருவதைத் தடுத்தல் போன்ற குற்றச்சாட்டுகளையும் அவர்கள் அடிக்கடி எழுப்பி வருகின்றனர். தேர்தல் பிரச்சாரத்தின் சில முக்கியமான கட்டத்தில் டிரம்பேகூட முறைகேடுகளுக்கான முயற்சிகள் இருப்பதாக குற்றம்சாட்டியதன்மூலம் தேர்தல் நடைமுறைகள் நியாயமானதாக இல்லை என்பதைத் தெளிவுபடுத்தினார். இவை எல்லாம் ஒன்றை உறுதிப்படுத்துகின்றன. ஆளும் ஏகபோகங்கள் தாங்கள் விரும்பும் வேட்பாளரை முன்னிறுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்களுக்கு அடிவருடி சேவகம் செய்யும் நிர்வாகத்தின் திரைமறைவு 'முறைகேடுகள்' இல்லாமல் தேர்தல்கள் நியாயமாக நடைபெறவில்லை. இது அனைத்து முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளிலும் நடைபெறும் அனைத்து தேர்தல்களிலும் இதுதான் நடைபெறுகிறது என்பதே உண்மை.

## தேர்தல் முடிவுகள் பற்றிய புரிதல்

ஆக யுஎஸ் அதிபர் தேர்தல் சில வெளிப்படையான குணங்களை எடுத்துக்காட்டியுள்ளது. ஒன்று, ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். இரண்டாவதாக அதை வேட்பாளர்களும் உணர்ந்துள்ளனர். மூன்றாவதாக, மக்கள் தங்களது தெரிவாக யாரை ஆதரிக்க விரும்புகின்றனரோ அந்த வேட்பாளர் தேர்தல் களத்தை விட்டே விரட்டப்பட்டார். நான்காவதாக, இரண்டு வேட்பாளர்களில் ஒருவர் தனது புத்திசாலித்தனமான வணிகத் திறமை மூலம் மக்களின் மனநிலையை நுகர்ந்து அதைப் பயன்படுத்தி பகட்டு பேச்சு, முழக்கம் மற்றும் பொழுதுபோக்கு அனுபவம் மற்றும் திறமைகளைப் பயன்படுத்தி அமெரிக்க மக்களின் குறிப்பிடத்தக்க அளவு அமெரிக்க மக்களை மயக்கும் அளவிற்கு வார்த்தைகளைப் பயன்படுத்தி வெற்றிபெற்றுவிட்டார். ஐந்தாவதாக, அவர் எவ்வளவுதான் தனித்தன்மை பெற்றவராக இருந்தாலும், அவர்களது எஜமானர், ஆளும் ஏகபோகங்கள், பன்னாட்டு நிறுவனங்கள், அதன் அடிவருடி நிர்வாகம் ஊடகங்களின் ஒரு பகுதியினர் தேர்தலுக்குப்பின் சில ஊடகங்கள்மீது டிரம்ப் காட்டிய கோபமானது, கிளின்டனின் இமெயில் மோசடியை பெரிதாக்கி, விளம்பரப்படுத்தியதன் மூலம் ஊடகங்கள் தனக்கு வழங்கிய ஆதரவை மக்களிடம் மறைத்து திசைதிருப்புவதற்காகக்கூட இருக்கலாம். அவற்றின் ஆதரவும் ஆசியும் இல்லாமல் இவராகவே வெற்றிபெற்றுவிட்டார் என்று நினைப்பது அறியாமையே ஆகும். ஆறாவதாக, தேர்தல் முடிவுகள் அதீதமாக மேற்பார்வையிடப் படுகின்றன எனும் தொடர்ச்சியான குற்றச்சாட்டானது, தாங்கள் விரும்பிய வேட்பாளர் வெற்றி பெறுவதை உத்திரவாதப்படுத்திட ஆளும் வர்க்கம் மேற்கொண்ட முயற்சிகள் என்பதையே காண்பிக்கின்றது.

ஏழாவதாக, டிரம்பின் வெற்றி தங்களது வெற்றி என்று பாதிக்கப்பட்ட மக்கள் நினைக்கக்கூடும். நடைபெறும் விளையாட்டின் ஆழம் தெரியாமல் மக்கள் அவ்வாறு நினைப்பார்களேயானால், அவர்கள் முந்தைய தருணங்களைப் போலவே, மக்களை ஏமாற்றி மக்களின் கோபத்தை தவறாக திசைதிருப்பி தங்களது வர்க்கத்திற்கு அடிவருடி சேவகம் செய்யும் தங்களுக்கு நம்பகத்தன்மையான வேட்பாளரை தேர்வு செய்யும் ஆளும் ஏகபோகங்களின் நயவஞ்சக திட்டத்திற்கு மீண்டும் ஏமாந்து பலியாகிவிடுவர். இதன்மூலம் ஆளும் ஏகாதிபத்தியங்களின் அடக்குமுறையும் ஒடுக்குமுறையும் எந்த எதிர்ப்புமின்றி தொடர்ந்து நடைபெறும்.

## டிரம்பிற்கு எதிரான மக்களின் கிளர்ச்சி

கதை இதோடு நிற்கவில்லை. ஒட்டுமொத்த அமெரிக்க மக்களும் டிரம்பை தங்களது அதிபராக ஏற்கவிரும்பவில்லை என்பது முடிவுகள் அறிவிக்கப் பட்டதிலிருந்தே தெரிகிறது. பதிவான ஒட்டுமொத்த வாக்குகளின் அடிப்படையில் ஹிலாரியைவிட டிரம்ப் உண்மையிலேயே பின்தங்கியுள்ளார் என்பதை முடிவுகள் காட்டுகின்றன. ஆனால் யுஎஸ்ஸில் உள்ள தேர்தல் முறையானது, ஒரு எலக்டோரல் காலேஜ் சிஸ்டம் (Electoral College System) என அழைக்கப் படுகின்றது. காங்கிரசில் தான் கொண்டிருக்கும் ஒட்டுமொத்த பிரதிநிதிகள் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு மாகாணமும் சில தேர்வு பிரதிநிதிகளைப் (Electors) பெற்றிடும். பொதுத் தேர்தலைத் தொடர்ந்து ஒவ்வொரு தேர்வுபிரதிநிதியும் ஒரு தேர்வு வாக்கை (Electoral Votes) செலுத்துவார். அங்கு மொத்தம் 538 தேர்வு வாக்குகள் உள்ளன. இதில் பாதிக்கும் மேற்பட்ட (270) வாக்குகளைப் பெறும் வேட்பாளர் வெற்றி பெற்றவராவார். இந்த தேர்தல் தேர்வு முறையின் அடிப்படையில் பொதுமக்களில் தீர்ப்பையும் தாண்டி டிரம்ப் வெற்றிபெற்றுள்ளார். இத்தகைய வெற்றி அறிவிப்பு வெளியான உடனே மியாமி, பிலடெல்பியா, நியூயார்க், சிகாகோ, பஃப்பல்லொ, போர்ட்லாண்ட், சியாட்டில், சான் ஃபிரான்சிஸ்கோ, லாஸ் ஏஞ்செல்ஸ், இன்னும் இதுபோன்ற நாட்டின் மூலைமுடுக்கெங்கும் உள்ள பெரிய மாகாணங்கள் அனைத்திலும் இளைஞர்கள் வீதிகளில் இறங்கிப் போராடினர். நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கானோர் பெரும்பாலும் இளைஞர்கள், வெள்ளை, கருப்பர், மற்றும் புலம்பெயர்ந்த அகதிகள் ஒன்றாகக் கைகோர்த்து நெடுஞ்சாலைகளிலும் வீதிகளிலும் கைகோர்த்து பேரணியாகச் சென்றனர், இனவெறி, பாலின பாகுபடு (sexism) , ஓரினவாத வெறுப்பு (homophobia) மற்றும் புலம்பெயர்ந்தவர்களை ஒழிப்பதற்கு எதிரான தங்களது முழக்கங்களை வெளிப்படுத்தினர். 'டிரம்ப் எனது அதிபர் அல்ல' 'டிரம்ப்பை சுற்றி சுவர் எழுப்புவோம்' போன்ற முழக்கங்களை அவர்கள் எழுப்பினர். ஏராளமானோர் கைது செய்யப்பட்டபோதிலும், நாட்கணக்கில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன, ஆளும் வர்க்கத்தின் இரண்டு கட்சிகளான, ஜனநாயக மற்றும் குடியரசு ஆகிய இரண்டு கட்சிகளின் தலைவர்களும் டிரம்ப் நிர்வாகத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுமாறும் கசப்பான தேர்தல் முடிவுகளின் 'காயத்தை ஆற்றிக்கொள்ளுமாறும்' மக்களை வலியுறுத்தியபோதும் அவை தொடர்ந்தன. பல இளைஞர்கள் டிரம்ப் வெற்றியால் உற்சாகமடைந்த இனவெறியாளர்கள், முஸ்லீம்–எதிர்ப்பாளர்கள் புலம்பெயர்ந்தவர்கள்–எதிர்ப்பாளர் வன்முறைக் கும்பலால் தனிப்பட்ட முறையில் மிரட்டப்பட்ட போதும் இந்த அறைகூவல் இளைஞர்களின் எதிர்ப்புணர்வை நசுக்கமுடியவில்லை. மாறாக டிரம்ப் அதிகாரப்பூர்வமாக அதிபராகப் பதவியேற்க இருக்கும் ஜனவரியில் மேலும் பல போராட்டங்களுக்குத் திட்டமிட்டுள்ளனர்.

## போராட்டங்களில் குறிப்பிடத்தக்க அம்சங்கள்

டிரம்ப் வெளிப்படுத்திய அனைத்து சமூக பிரச்சினைகளுக்கும் எதிராக போராட்டங்கள் நடைபெறுகின்றன. போராட்டத்தில் மாணவர்கள், பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி மற்றும் பல்கலைக் கழக பேராசிரியர்கள், விஞ்ஞானிகள் அதேபோல் தொழிலாளர்கள் உள்ளிட்ட சாமானிய மக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பு மக்கள் பங்கேற்றனர். இதில் இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு ஜனநாயகக் கட்சியின் ஆதரவு என்ற அறிகுறியே இல்லை என்பது கவனிக்கப்படவேண்டிய அம்சமாகும். 'வால் ஸ்ட்ரீட்டை ஆக்கிரமிப்போம்' இயக்கம் நடைபெற்றபோது 'நாங்கள் 99%, அவர்கள் 1%' என்று மக்கள் எழுப்பிய கோஷத்தைப் பற்றி எழுதிய வாஷிங்டன் போஸ்ட் இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் உலகளாவிய முதலாளித்துவ அமைப்பைத்தான் கூறுகிறார்கள் என்று கூறியிருந்தது. 18 முதல் 29 வயதுடைய இளைஞர்களிடையே ஹார்வர்டு பல்கலைக்கழகம் நடத்திய சமீபத்திய ஆய்வில் (ஏப்ரல் 2016) அவர்களில் 51% முதலாளித்துவத்தை ஆதரிக்க வில்லை என்று கூறியுள்ளனர். தேர்தல் தந்திரங்கள் மற்றும் வார்த்தை ஜாலங்களின் மூலமாக முதலாளித்துவத்திற்கு எதிரான மக்களின் கோபத்தை அடக்கி விட முடியாது என்பதை இந்த இரண்டும் தெரிவிக்கின்றன. ஆனாலும்கூட, இந்த எதிர்ப்பாளர்களுக்கு போராட்டங்களின் போக்கை சரியான திசைவழியில் கொண்டு செல்வதற்கு தனிநபரோ அல்லது கூட்டுத் தலைமையோ தேவைப்படுகிறது. முதலாளித்துவம் பற்றிய விமர்சனம் சுதந்திரமான சந்தை மீதான விமர்சனமாகவும் உள்ளது என்பதை ஆய்வு சுட்டிக் காட்டுகிறது. ஆனால் அமெரிக்க மக்கள் இன்னும் ஆழமான உண்மைகளை உணர்ந்துகொள்ளவும், முதலாளித்துவத்தின் அசிங்கமான முகம் குறித்த மேலும் பல தகவல்களை அறிந்துகொள்ள வேண்டியுள்ளது என்பது தெரிகிறது.

## வேலையில்லாத்திண்டாட்டம் உள்ளிட்ட அனைத்து தீமைகளையும் ஈன்றெடுப்பது எது?

அவர்கள் முன்னாள் ஏராளமான கேள்விகள் உள்ளன. அமெரிக்கர்கள், அந்நாட்டு இளைஞர்கள் ஏன் இத்தகைய கடுமையான வேலையின்மையை எதிர்கொள்கின்றனர்? எது வேலைகளை இல்லாமல் செய்தது? இதற்கு புலம்பெயர்ந்தவர்கள் காரணமா? உலகம் முழுவதிலும் குறிப்பாக உற்பத்தித் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு குறைந்து வருவது உண்மையில்லையா? ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா என இந்த அனைத்து கண்டங்களிலும் குறிப்பாக ஐரோப்பாவில் போராட்ட இயக்கங்கள் அலையலையாய் வெடிக்கின்றன, ஏன்? மிகப்பெரும் தொழில்நுட்ப வளர்ச்சியில் உற்பத்தி அதிகரித் திருப்பதற்கேற்ப, அதற்கான தேவை அந்த அளவிற்கு கூடவில்லை என்பது உண்மையில்லையா? ஏன் இந்த இடைவெளி? ஏன் இந்த உபரி உற்பத்தி? முதலாளித்துவம் தொடர்ச்சியாக மக்களை கசக்கிப் பிழிந்து, அவர்களை வறியவர்களாக்கி, அவர்களது வாங்கும் சக்தியை உறிஞ்சியதால் முதலாளித்துவம் எதிர்பார்க்கும் அதிக சந்தைக்கு பாதிப்பு ஏற்படவில்லையா? நாம் மேற்கூறிய உண்மை விவரங்களிலிருந்து அமெரிக்கர்களின் வருவாயும் செலவும் தொடர்ந்து குறைந்துவருவது தெரியவருகிறது. எனவே சந்தை நெருக்கடி உள்ளது, உபரி உற்பத்தி இருக்கிறது, தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. தொழிற்சாலைகளில் தேக்க நிலை உருவாகும்போது வேலைவாய்ப்புகள் குறைக்கப்படுகின்றன. இந்த உண்மைகளையெல்லாம் தற்போது பூர்ஷ்வா அறிஞர்களே கண்டறிந்து ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால் அவர்கள் அதோடு நிறுத்திக்கொள்கின்றனர். அது முதலாளித்துவத்தால்தான் வருகிறது என்று அவர்கள் ஒப்புக்கொள்வதும் இல்லை முதலாளித்துவ சுரண்டலால் பலியான சாமானிய மக்களும் அதை புரிந்துகொள்ளவில்லை. இந்த உண்மையை மார்க்சிய மேதைகள், மார்க்ஸ் முதல் அனைவருமே மீண்டும் மீண்டும் வெளிக்கொண்டுவந்துள்ளனர். இது முதலாளித்துவத்தின் நெருக்கடி. தேவையை விட உற்பத்தி அதிகரித்துவிட்டது, இது உபரி உற்பத்தி நெருக்கடிக்கு இட்டுச்செல்கிறது.

அதோடு, புதியபுதிய தொழில்நுட்பங்கள் கிடைக்கும்போது, லாபவெறிகொண்ட ஏகபோகங்கள் ரோபோக்கள், கம்ப்யூட்டரால் இயங்கும் இயந்திரங்கள், ஜிபிஎஸ் கண்டறியும் உபகரணங்கள் போன்றவற்றை ஏராளமாக வைத்துக்கொண்டு உழைப்பைக் குறைக்கும் உபகரணங்களை வைத்து தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்து தங்கள் போட்டியாளர்களை முந்த எத்தனிக்கின்றனர். அதே நேரத்தில் உழைப்புச் செலவை குறைப்பதற்காகவும் அதன்மூலம் அதிகபட்ச லாபத்தை பெருக்கவும் அவர்கள் உற்பத்தியை அவுட்சோர்சிங் செய்கின்றனர். யுஎஸ் ஆட்சியாளர்கள் விரும்பாமல் அகதிகளை எப்படி யுஎஸ் நிர்வாகம் ஏற்றுக் கொள்ளும்? இந்த அகதிகள் யுஎஸ் ஏகபோகங்களுக்கு மலிவான உழைப்பை வழங்குகின்றனர்,

தொடர்ச்சி 12ம் பக்கம்

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : 2nd week of Every Month

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

## மத்தியக்கிழக்கு மற்றும் அதனைச் சுற்றியிருக்கும் நாடுகள்

# சரியான தலைமையின்கீழ் நடக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமே இத்தருணத்தின் தேவையாகும்

8ம் பக்கத் தொடர்ச்சி

மத்தியக்கிழக்கு மற்றும் அதனைச் சுற்றியுள்ள நாடுகளில் இதே காட்சிதான் அரங்கேறிக்கொண்டிருக்கின்றது. இத்தகைய ஏகாதிபத்திய திட்டமானது, எண்ணற்றவர்கள் மடிவதற்கும் மற்றும் ஊனமாவதற்கும், அப்பாவி மக்கள் இடையறாது கூட்டம் கூட்டமாக புலம் பெயர்ந்து சென்றிடவும், அழுது புலம்பி ஓய்ந்து போவதற்கும் மற்றும் தாங்கள் செய்யாத குற்றத்திற்காக போரினால் பாதிப்படையவும், வாழ்விடத்தை விட்டு புகலிடம் தேடி பாதுகாப்பான இடத்திற்கு – படகுகளில் அளவுக்கு அதிகமான எண்ணிக்கையில் பயணம் செய்வதனால் வருகின்ற மோசமான ஆபத்தினை எதிர்கொண்டு வெளியேறிடவுமே வழிவகுத்திருக்கின்றது.

பலம் பொருந்திய நாடுகளும், அவற்றின் ஏகபோகங்களின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்களும், அந்நிய நாட்டினுள் நுழைவது நியாம்தானா? அவர்களின் மலிவான உழைப்பை அந்நாடுகள் சுரண்டுவது நியாயம்தானா? அல்லது நியாயமற்றதா? என்பது குறித்து ஆர்வத்துடன் அக்குவேறு ஆணிவேராக அலசிப்பார்த்து பகுப்பாய்வு செய்கின்றனர். உலக நன்மைக்காக மனசாட்சியுடன் நடந்துகொள்ள வேண்டிய ஐக்கிய நாடுகள் சபையானது, இப்போது ஏகாதிபத்தியவாதிகளின், இன்னும் சொல்லப் போனால் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் பாதுகாவலர்களாக மாறி, தீர்வு எதுவும் காணாமல் நீண்ட காலமாகவே மௌனியாக, அமைதியாக இருக்கின்றது. ஒட்டு மொத்த மனித இனமே திக்கற்று நிற்கின்றது. கீழ்த்தனமான இச்செயல்கள் எவ்வாறு தண்டனையிலிருந்து தப்பித்துக்கொண்டே வருகின்றன? இத்தகைய மோசமான குற்றச்செயல்களைப் புரிபவர்கள் எங்ஙனம் தண்டனையின்றி தப்பிக்கின்றனர்? எங்ஙனம் குறைந்த பட்ச விமர்சனத்திலிருந்தும்கூட தப்பிக்கின்றனர்?

### ஏகாதிபத்தியவாதிகளால் மக்கள் பாதிக்கப்படுவதன் காரணம் சரியான தலைமை இல்லாததே

இது சோகமான பிரச்சினையின் ஒரு பாகம் மட்டுமே. சில மத்தியக்கிழக்கு நாடுகளில் கம்யூனிச இயக்கங்கள் அதிகமாக நடைபெற்றன எனினும், மார்க்சிச–லெனினிச அடிப்படையிலான புரட்சிகரப் போராட்டங்கள் அந்நாடுகளில் போதிய அளவில் வளர்ந்திட முடியவில்லை. நவீன திருத்தல்வாதத்தின் பிடியில் சிக்கியிருக்கும் இந்நேரத்தில், உலக கம்யூனிச இயக்கமானது கணிசமான அளவில் பலவீனப்பட்டிருக்கின்றது. அவசரமாக தேவைப்படுகின்ற உண்மையான போர்க்குணமிக்க ஒரு அமைதி இயக்கமும்கூட, ஒரு உண்மையான ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமும்கூட உருவாகிடுவது கடினமாயிருக்கின்றது. மேலும் மத்தியக் கிழக்கு நாடுகளில், கம்யூனிசப் பதாகையை தாங்கியிருக்கும் கட்சிகள் யதார்த்தத்தில் சக்தி அற்றவைகளாக மாறிவிட்டன.

இத்தகைய சூழ்நிலைமையில், மத்தியக்கிழக்கு நாடுகள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள நாடுகளின் மக்கள் மனிதாபிமானமற்ற வகையில் துன்பங்களை எதிர்கொண்டு இருப்பினும், அநீதியான தலையீடு மற்றும் ஆக்கிரமிப்புக்கு எதிராக மக்களை ஒன்று திரட்டி வழிநடத்திடவும், போர்வெறி ஏகாதிபத்திய வாதிகளுக்கு எதிராகப் போராடிட அவர்களுக்கு உதவி புரியவும் மற்றும் அவர்களின் துன்பத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றவுமான தலைமை ஏதும் இப்போது இல்லை. அதனால் ஏகாதிபத்திய தாக்குதல்களை முறியடிக்க முடியவில்லை; எதிர்ப்பேதுமின்றி மற்றும் தண்டனையிலிருந்து தப்பித்துவிடும் ஏகாதிபத்தியவாதிகளின் திட்டங்களுக்கு வடிவம் கொடுக்கப்படுவதை தடுக்க முடியவில்லை. அதே சமயம், கம்யூனிஸ்டுகளை மையமாக வைத்து, உலகம் முழுவதும் பரவக்கூடிய, போர்க்குணமிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் மற்றும் கருத்தியல் –கலாச்சார ரீதியில் தயார் நிலையிலுள்ள ஒரு நீடித்த அமைப்பு ரீதியிலான போராட்டங்களை உடனடியாக வளர்த்தெடுப்பது இத்தருணத்தின் தேவையாயிருக்கின்றது.

இப்பிரச்சினையின் முக்கியமான மற்றும் மூன்றாவது பிரதானமான அம்சம் இங்குதானிருக்கின்றது. உலக மக்கள், அதற்கும் மேலாக மத்தியக் கிழக்கு மற்றும் அதனைச் சுற்றியுள்ள நாடுகளின் மக்கள் இப்பிரச்சினையை முனைப்புடனும் உன்னிப்புடனும் கையாள வேண்டும். அவர்கள் பாரபட்சமின்றி இந்த அப்பட்டமான உண்மையை எதிர்கொள்ள வேண்டும். விஷயங்கள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருப்பதைப்போல தொடர்ந்து நடைபெற முடியாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எப்போதுமே நடைபெற்றுக்கொண்டிருக்க முடியாது. அது நீண்ட காலத்திற்குக்கூட நடைபெற்றுக்கொண்டிருக்க முடியாது. பின்வாங்குவது என்ற கேள்விக்கே இடமில்லை.

ஆகவே, எழுந்து நின்று எதிர்த்திட, மக்கள் சித்தாந்த ரீதியில், அமைப்பு ரீதியில், தார்மீக ரீதியில் தங்களை தயார்படுத்திக்கொண்டேயாக வேண்டும். சரியான வழியை அவர்கள் கண்டுகொண்டாக வேண்டும். அனைத்து அம்சங்களிலும் அவர்களைத் தயார்படுத்திடக்கூடிய தங்களின் சொந்த தலைமையை கட்டியெழுப்பிட வேண்டும். ஒன்றிரண்டு போராட்டங்களுடன் அது முடிவடைந்துவிடாது. நம் இலக்கினை அடையும் வரையில் அது தொடர்ந்து நீடித்திருக்க வேண்டும்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையிலான ரத்தவெறி பிடித்த, லாப வேட்கை கொண்ட, கொடூரமான மற்றும் நயவஞ்சமான ஏகாதிபத்தியவாதிகள் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொண்டு, அவர்களின் காட்டுமிராண்டித்தனமான சாகசங்களை நீண்ட காலத்திற்கு செய்து கொண்டேயிருக்க அனுமதித்திடக்கூடாது என்பதே இப்போது உடனடியாக நிர்ணயிக்கப்பட வேண்டிய இலக்காகும்.

இதற்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்! உலகத்தின் மனசாட்சி கொண்ட மக்கள் அக்குரலை எழுப்பிட வெளிவர வேண்டும்! மேலும் சக்தி வாய்ந்த எதிர்ப்புப்போராட்ட மையங்களை ஏற்படுத்தும் வகையில் மத்தியக் கிழக்கு நாடுகளின் மக்களுக்கு உதவி புரிந்திட வேண்டும். ●

# அமெரிக்க அதிபர் தேர்தல் . . .

11ம் பக்கத் தொடர்ச்சி

இதன்மூலம் உற்பத்தி செலவை குறைக்கின்றனர். இல்லாவிட்டால் எங்கு மலிவான இடுபொருட்களும் உழைப்பு சக்தியும் கிடைக்கிறதோ அந்த நாடுகளில் அவுட்சோர்சிங்கை யுஎஸ் ஏகபோகங்கள் தெரிவுசெய்து கொள்வர். குறைந்த செலவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் அதிகவிலைக்கு விற்கப்பட்டு அவர்களுக்கு அதிக லாபத்தை ஈட்டித் தரும். அதிக செலவில் யுஎஸ்லேயே உற்பத்தி செய்தால் இத்தகைய லாபத்தை அவர்களால் ஈட்ட இயலாது. எனவே உள்ளூர் அமெரிக்கர்களின் வேலைவாய்ப்பை அகதிகள் தட்டிப்பறிக்கிறார்கள் என்ற கேள்விக்கே இடமில்லை. ஆளும் முதலாளித்துவம்தான் அவர்களது வேலைவாய்ப்பைத் அழித்தொழிக்கிறது. இந்த உண்மையை அவர்கள் புரிந்து கொள்ளாவிட்டால் அகதிகளுக்கு எதிராக நடைபெறும் தவறான பிரச்சாரத்திற்கு அவர்களும் பலியாவர்.

முஸ்லீம்களும் தீவிரவாதத்தை உருவாக்கவில்லை. சொல்லப்போனால் ஜனநாயகத்தின் பாதுகாவலர்களென்றும் தீவிரவாதத்திற்கு எதிராகப் போராடுவதில் முன்னணியிலிருப்பதாகவும் தங்களைத் தாங்களே முன்னிறுத்திக்கொள்ளும் யுஎஸ் ஏகாதிபத்தியவாதிகள்தான் இன்றைய உலகில் மிகவும் நாசகரமான போர்–வெறி ஏகாதிபத்திய சக்திகள் என்பதே உண்மையாகும். அல்–கொய்தா, தாலிபான்கள் அல்லது சமீபத்திய ஐஎஸ்ஐஎஸ் என ஒவ்வொரு பயங்கர தீவிரவாத அமைப்புகளையும் உருவாக்கியது– வழிநடத்தியது– நிதிவழங்கியது– பயிற்சியளித்தது–ஆயுதங்கள் வழங்கியன என அத்தனையையும் செய்தது அமெரிக்காதான். ஈராக் அல்லது கொசோவா அல்லது லிபியா போன்ற பல்வேறு நாடுகளில் நாசகரமான கொடிய அரசு பயங்கரவாதத்தை நடத்தியது அவர்கள்தான். எனவே முஸ்லீம்களை தீவிரவாதிகள் என்று முத்திரை குத்துவதும் அமெரிக்காவுக்குள் அவர்களது வருகையைத் தடை செய்வது என்று கூறுவது அடிப்படைவாதத்திற்கு–எதிரான அணுகுமுறையாக டிரம்பின் ஒரு தேர்தல் தந்திரமாகவே இருக்கிறது. ஆனால் மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்கும் ஏகாதி பத்திய திட்டத்தைத் தவிர இது வேறு ஒன்றுமல்ல.

### மக்கள் விரும்பும் மாற்றத்திற்கான வழியை மார்க்சிசம்–லெனினிசமே காட்ட முடியும்

யுஎஸ் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் சுரண்டல் மற்றும் அடக்குமுறையின் நீண்டநெடிய கொடூர ஆட்சியை தங்கள் தோள்களில் சுமந்துள்ள அமெரிக்கர்கள் அதிலிருந்து எப்படியாவது வெளியேவர வேண்டும் என்று தீவிரமாக முயற்சிக்கின்றனர். அதற்கு 'வால் ஸ்ட்ரீட்டை ஆக்கிரமிப்போம்' இயக்கம் சரியான உதாரணமாகும். தற்போதைய யுஎஸ் அதிபர் தேர்தல், பெர்னி சாண்டர்ஸுக்கு கிடைத்த ஆதரவு ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் புத்திசாலித்தனமான ஏமாற்றுத்தனம் மற்றும் திமிர்த்தனத்தை பிரதிபலிக்கக்கூடிய பொருத்தமிக்க பிரதிநிதியான டிரம்பின் வெற்றிக்கு எதிராக நடந்த பரவலான போர்க்குணமிக்க போராட்டங்கள் தற்போதிருக்கும் ஆட்சிக்கு எதிரான அமெரிக்க மக்களின் பெருகிவரும் கோபத்தை மீண்டுமொரு முறை எடுத்துக்காட்டுகிறது. ஆர்ப்பாட்டங்கள் வெறுமனே தேர்தல் முடிவுக்கு மட்டும் எதிரானதல்ல. அது ஒரு புரட்சிகர மாற்றத்தை பிரதிபலிக்கிறது. வால் ஸ்ட்ரீட்டை ஆக்கிரமிப்போம் இயக்கத்தில் நடைபெற்றதைப் போன்றே தற்போது கிளர்ந்தெழும் போராட்டங்களிலும் அமெரிக்க மக்களுக்கு உண்மையான மார்க்சிய தலைமை, அடித்தட்டிலிருந்து தொடங்கி போதிய அமைப்பு பலம் பொருந்திய ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி எஃகுறுதி போன்ற அமைப்பு கொண்ட கட்சி விரும்பத்தகுந்த மாற்றம் ஏற்படுத்த தலைமை ஏற்பது தேவைப்படுகிறது. ஏனெனில், விஞ்ஞானபூர்வ தத்துவத்தின் அடிப்படையிலான சித்தாந்தமான, வெற்றிகரமாகவோ அல்லது வெற்றிபெறாததாகவோ இருந்தாலும் ஏராளமான அளப்பரிய போராட்டங்களின் அனுபவங்களால் செழுமைப் படுத்தப்பட்ட மார்க்சிசம்–லெனினிசம் மட்டும்தான், மக்கள் விரும்பும் இலட்சியத்தை அடைய இட்டுச்செல்லும். அப்போதுதான் இந்த சுரண்டல், அடக்குமுறை சமூக ஒழுங்கிற்கு எதிரான தங்களது ஒவ்வொரு உறுதியான நடவடிக்கைக்குப் பின்னரும் கனத்த இதயத்தோடு பின்னோக்கி செல்லாமல் மக்கள் பீடுநடை போடலாம். ●

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai,Chennai 600 112 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**